பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 13, புதன்கிழமை 28.12.2016 | கதிர் 53

**வெவ்வேறு விபத்துக்களில் நேற்று 9 பேர் மரணம்!**


கொழும்பு, டிசெ.28

கடந்த24மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் 9பேர் உயிரிழந்துள்ளனர். வவுனியாநாவற்குளம்பகுதியில்பிக்கப்வாகனம் பாரவூர்திஒன்றுடன்மோதியதில் வைத்தியர் ஒருவர் உட்பட மூவர் பலியாகினர்.

மகரகமவில் கார் ஒன்று ஓட்

பக்கம் 20 »

# கூட்டமைப்பின் உயர்பீடத்தை கூட்டலாம் என்கிறார் சம்பந்தன்



*அங்கத்துவக் கட்சிகளின் வசதிக்கேற்ப 9ஆம் திகதிக்கு முன்னர் ஒரு நாளில்*

கொழும்பு, டிசெம்பர்.28

**"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடமான ஒருங்கிணைப்புக் குழுவை எப்போதும் கூட்டலாம். விரைந்து கூட்ட வேண்டும் என்ற கோரிக்கை இருக்குமானால், எதிர் வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்று அரசமைப்புச்சபையாக மீண்டும் கூடுவதற்கு முன்னர், ஏனைய அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களின் வசதிக்கேற்ப ஒரு திகதியை நிர்ணயித்து அந்தத் தினத்தில் கூடலாம்."**

**- இவ்வாறு நேற்றிரவு 'காலைக் கதிருக்குத்' தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

"அவசரமும் அவசியமும் கொடுத்து ஆராயப்பட வேண்டியபலமுக்கியவிடயங்கள்எழுந்துள்ளமையால்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதுவித காலதாமதமும் இல்லாமல் மிக விரைவாகக் கூட்டுங்கள்." - என்ற சாரப்பட கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சார்பில் அதன்செயலாளரும்,வவுனியா மாவட்டக் கூட்டமைப்பு எம்.பியு

பக்கம் 19 »

## எல்லை நிர்ணய அறிக்கை மேலும் சில நாள்கள் பிந்தும்!

கொழும்பு, டிசெ.28

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்படுவது மேலும் சில நாட்கள் காலதாமதமாகும் என குழுவின் தலைவர் அசோகா பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை நேற்று வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் எல்

பக்கம் 19 »

*எல்லை நிர்ணய அறிக்கையை*

## கட்சித் தலைவர்கள் முன்னிலையில் கையளிக்குமாறு கோருகிறார் ரணில்

கொழும்பு, டிசெ.28

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லைநிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையை கட்சி தலைவர்கள் முன்னிலையில் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த அறிக்கையைத் தன்னிடம் ஒப்படைப்பதாயின் கட்சி தலைவர்கள் முன்னிலையில்

பக்கம் 20 »

*மருத்துவ சிகிச்சைக்குச் சென்ற*

## சம்பந்தன் புதுடில்லியில் முக்கிய தரப்புகளுடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ.28

கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த இலங்கையின் எதிர்க் கட்சித்தலைவரும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், புதுடில்லியில் பல முக்கிய சந்திப்புக்களில் பங்குபற்றியிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

ஒரு வாரகால பயணமாக புதுடில்லி சென்றிருந்த அவர் கடந்த ஞாயிறன்றே கொழும்பு திரும்பியிருக்கிறார்.

பக்கம் 19 »

## சமஷ்டியும் ஒற்றையாட்சியும் கிடையாது; பௌத்தத்துக்கு முன்னுரிமை தொடரும்!

*சுதந்திரக்கட்சி சார்பில் அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.28

நாட்டின் சுயாதீனம் மற்றும் இறையாண்மையைப் பாதிக்கும் சமஷ்டித் தீர்வுக்குச் செல்வதற்கும், நாட்டில் இன்னுமொரு நாடு உருவாகுவதற்கும் இடமளிக்கப்போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையும் அரசமைப்பு ரீதியான எந்தவொரு மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என சமூக வலுவூட்டல்மற்றும்நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துக் கூறும்போது தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்: -

புதிய அரசமைப்பில் நாட்டின் ஒற்றையாட்சியிலும், சிறுபான்மையின மதத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டுள்ள பௌத்த மதத்துக்கான முன்னுரிமையிலும், எவ்வித மாற்றத்தையும்

பக்கம் 19 »

## பெண் வைத்தியரும் மாமன் மாமியும் வவுனியா கோர விபத்தில் உயிரிழப்பு!

*கணவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்*



வவுனியா டிசெ.28

ஏ9 நெடுஞ்சாலையில் வவுனியா - மதவாச்சி நாவற்குளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில், பெண் வைத்தியரும் அவரது மாமன், மாமியுமாக மூவர் பலியாகினர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புநோக்கிச்சென்றகென்ரெயினர் வாகனமும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பிக்கப் ரக வாகன

பக்கம் 19 »

**அளப்பு அருணாசலம்**



ஐயாவின்ரை உஷாரைப் பார்த்தா... உவர் புதுடில்லியிலை இருந்து ஊக்க மருந்தோட வந்திருக்கிற மாதிரித்தான் தெரியுது---!

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி கொழும்பில் காலமானார்

*இன்று நாடாளுமன்றில் அஞ்சலி*



கொழும்பு, டிசெ.28

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் தனது 83ஆவது வயதில் காலமானார். சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் கடந்த ஒரு வார காலமாக சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்று காலமானார்.

1933 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி பிறந்த ரட்ணசிறி விக்கிரம நாயக்கா, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மற்றும்

பக்கம் 19 »

# யுத்தத்தால் தென்னந்தோப்புகள் அழிவு அதனால் எமது பொருளாதாரம் பாதிப்பு

## மீள் நடுகை அவசியம் என்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம் டிசெ.28

யுத்தம் என்பது வெறுமனே துப்பாக்கிச்சூடும் ஷெல் தாக்குதலுமாக இருக்கவில்லை. அது பொருளாதாரரீதியாகஎங்களை மிகவும் பின்னோக்கி நகர்த்தி விட்டது. கடந்த காலங்களில் எமது மக்களுக்கு பெரும் வருவாயை ஈட்டித்தந்த பல தென்னந்தோட்டங்களும் வீடுகளில் காணப்பட்ட தென்னைகளையும் யுத்தம் அடியோடு அழித்து விட்டது. எனவே, புதிய தென்னந் தோட்டங்களை உருவாக்குவதன் மூலம் நாம் எமது பொருளாதாரத்தை வளம்படுத்திக் கொள்ள முடியும்.

–இவ்வாறுதெரிவித்தார்வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். வடக்கு மாகாண தென்னை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தெங்குச் செய்கையாளர்களுக்கு மானியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:–

தென்னையின் முக்கியத்துவம் ஔவையாரின் காலத்திலேயே உணரப்பட்டிருந்தது. இதனால்தானோ என்னவோ முன்னைய காலத்தில் கூடுதலான செல்வந்தர்களும் பணம் படைத்தவர்களும்தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பகுதிகளில் ஏக்கர் கணக்கான தரிசு நிலங்களை வாங்கி அவற்றில் தென்னைப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டுதமதுவருவாயை வளப்படுத்திக்கொண்டனர். தென்னை தாளால் தானுண்ட நீரை பல வருடகாலம் தலையாலேதான் தரும் என்பதை அவர்கள்உணர்ந்திருந்தார்கள்.

பொதுவாகவே தென்மராட்சி மக்கள் விருந்தோம்பலில்சிறந்தவர்கள்எனக்கூறப்படுகின்றது. அதற்குமூல காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் அப்பகுதியில்சாதாரணமாகஒவ்வொரு வீட்டிலும் பல தென்னை மரங்கள்இருப்பன.அவர்களின் வீட்டுச் செலவுக்கும் பிள்ளைகளின்கற்றல்நடவடிக்கைகளுக்கும் இத் தென்னைமரங்கள் மூலம் கிடைக்கின்ற வருவாய் மிகவும் போதுமானதாக இருக்கும். அதற்கு மேலாக அவர்களின் தொழில் மூலம் கிடைக்கின்றவருவாய்கள்மேலதிகவருவாய்களாகவே அமைந்திருப்பன. அதனால்தானோ என்னவோ அப்பகுதி மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். நான் 1980, 81களில்சாவகச்சேரியில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றியவன். இரு கிழமைகளுக்கு ஒருமுறை பளை சுற்று நீதிமன்றுக்குச் சென்று வந்தவன். அப்போது தென்மராட்சி மண்ணின் செழுமையைக் கண்டு இரசித்தவன். மணல் பாங்கான அங்குள்ள மண் தென்னைக்கு மிகவும் உகந்தது.

ஆனால், கடந்தகாலத்தில்ஏற்பட்ட கடுமையான யுத்தங்களின் போது எறிகணைத் தாக்குதல்கள் வருமானந் தரக்கூடிய அனைத்துப் பயிர்களையுஞ் சிரச்சேதம் செய்தது மட்டுமன்றி அவற்றிலிருந்துவருமானத்தை நம்பியிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஏதிலிகளாகவும்மாற்றியது. அம்மக்கள் வருமானத்தை இழந்து குடும்பத்தை எவ்வாறு கொண்டுசெல்வது என்றுவகை தெரியாமல் இன்னமும் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் காரணமாக பலபாரிய தென்னைமரத்தோட்டங்களும் ஏனைய வீடுவாசல்களில் காணப்பட்ட தென்னை மரங்களும்அடியோடுஅழிக்கப்பட்டன. தென்மராட்சிப்பகுதிஒருசூனியப் பிரதேசமாக அல்லது கட்டாந்தரையாக ஆக்கப்பட்டது.

இவ்வாறானபாதிப்புக்களுக்கு ஆளாகிய மக்களுக்கு உதவுவதற்காகவே தென்னை பயிர்ச்செய்கை சபை மானிய உதவிகளையும், தென்னை மரக்கன்றுகள், அவற்றிற்கானஉரவகைகள், மருந்துகள், விவசாய அறிவுறுத்தல்கள் ஆகிய அனைத்து உதவிகளையும்வழங்கிவருகின்றது. மீண்டும் இந் நிலங்களில் தென்னை மரச்சோலைகளை உருவாக்கிவருவாயைப்பெருக்குவதற்கு முயலுகின்றது.

இவ்வேளையில் அவர்களின் முயற்சிக்கு உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் நாமும் எமது சக்திக்கு ஏற்றவகையில் உதவிகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும். முடியுமான வரைதென்னைகளைமீளநாட்ட முன்வரவேண்டும். காணியுள்ள ஒவ்வொரு வீட்டிலும் உருவாக்கப்படுகின்றகுறைந்தபட்சம்ஐம்பது தென்னைமரங்கள் முறையாக பராமரிக்கப்படின் குறிப்பிட்ட 5 வருட காலப்பகுதியில் தாளுண்ட நீரைத் தலையாலே தருவதற்குத் தென்னைகள் தயாராகிவிடுவன.

இன்று யுத்தம் முடிவுற்று 7 வருடங்கள் முடிவடைந்து விட்டன. பலரின் காணிகள் விடுவிக்கப்பட்டு 5 அல்லது 6 வருடங்களுக்கு மேற்பட்டபோதும் அவற்றில் இதுவரை எந்தவித பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளாது அவை தரிசு நிலங்களாக காணப்படுவது வேதனைக்குரியது.

நீண்டகால இடப்பெயர்வு அவர்களை தூர இடங்களில் குடியமரச் செய்துவிட்டதால் அவர்கள் தமது பாரம்பரிய காணிகளில் வந்து குடியிருக்கவோ அல்லது பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவோ பின் நிற்கின்றார்கள். பலரின் முதுமையும் அவர்களைப் பின்நிற்க வைக்கின்றது. இப்பேர்ப்பட்ட காணி உரித்தாளர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் காணிகளை தென்னைப்பயிர்ச் செய்கை சபை குத்தகைக்கு எடுத்து அவற்றை வளம்படுத்த முன்வர முடியாதா என்ற கருத்தை திரு.வைகுந்தன் அவர்கள்பரிசீலிக்கவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில்இன்னொரு விடயத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். அன்றைய கிராமிய வாழ்க்கை முறைமை எளிமையானதாக அமைந்திருந்தது. அன்று அவர்களிடையே போட்டி இல்லை, பொறாமை இல்லை, மிகப் பெரிய பணச் செலவு அதாவது ஆடம்பரச் செலவு இல்லை. குறுகியவருமானத்தில்நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஆனால், யுத்தத்தால் ஏற்பட்டதாக்கம் அவர்களை நகர்ப்புறம் நோக்கி நகரச் செய்தது. பிள்ளைகளைக் கற்பிப்பதற்கு சிறந்த பாடசாலைகள் தேவையாயிருந்தன. பொழுதுபோக்குச் சாதனங்கள் மற்றும் இன்னோரன்ன வசதிகள் அவர்களை நகர்ப்புறங்களில் வரவேற்றன. இவை அவர்களை மீண்டும் கிராமத்துக்கு செல்லவிடாது தடுக்கின்றன.

விட்டுச்சென்றவர்கள்கிராமங்களுக்கு வந்து பயனுள்ள அமைதி வாழ்க்கையை வாழுங்கள்என்றுநாங்கள்அவர்களிடம் கோரிக்கை விடுகின்றோம். ஆனால்அவர்கள்கிராமத்துக்கு வந்தால் என்ன, வராவிட்டால் என்னஇங்குள்ளதரிசுநிலங்கள் அனைத்தும்தென்னந்தோப்புக்களாக மாற்றப்படவேண்டும். அவற்றிற்கு தென்னை அபிவிருத்தி சபையும் அவ்வப் பகுதி பிரதேசசெயலர்கள், கிராமஉத்தியோகத்தர்கள் ஆகியோரும் வேண்டிய உதவிகளை எம்மக்களுக்கு வழங்கவேண்டும். எம்மக்களின் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படல் வேண்டும். – என்று அவர் தெரிவித்தார்.

(ம)

## தென்னை அபிவிருத்தியில் பாதிப்புற்றோருக்கு மூன்று கோடி ஐம்பது லட்சம் ரூபா நிதியுதவி

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடமாகாணதென்னைஅபிவிருத்திச் சபையினால் தென்னை அபிவிருத்தி உற்பத்திகளினால் பாதிக்கப்பட்ட 180 பயனாளிகளுக்கு 3 கோடியே 50 லட்சம் ரூபா நிதியுதவி நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண தென்னை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் தென்னைஅபிவிருத்திஉற்பத்திகளினால்பாதிக்கப்பட்ட180பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கல் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி நிதியுதவி வழங்கப்பட்டது.

வடமாகாண தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் அ.வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டு மேற்படி உதவித் திட்டங்களுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இதன்போது தென்னை சார்ந்தஉற்பத்திபொருள்களை மேற்படுத்துவதற்கான காசோலைகள், மானிய அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கான காசோலைகள், கைத்தொழில் உற்பத்திக்கான உதவித்திட்டங்கள், மூலப்பொருள்களை கொள்வனவு செய்வதற்





கான காசோலைகள் மற்றும் தென்னை மரக் கன்றுகளை கொள்வனவு செய்வதற்கான காசோலைகள்போன்றவை பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

(உ–10)

## பொலிஸாருக்கு எதிராக கோபம் கொள்ளாதீர்கள்! பொலிஸ்மா அதிபர் உணர்வுபூர்வமாக கோரிக்கை

பொதுமக்களைப் பாதுகாக்கும் சேவகனாகச் செயற்படும் பொலிஸாருக்கு எதிராக குரோதம் இழைக்காதீர்கள், கோபம் கொள்ளாதீர்கள் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கண்ணீர்மல்கஉணர்ச்சிபூர்வமாகக் கோரிக்கை விடுத்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

இந்த நாட்டில் பயங்கரவாதம் இல்லை. பிரிவினைவாதம் இல்லை. மக்கள் நிம்மதியாக வாழ விரும்புகின்றனர். தங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் என்ற வேண்டுகோளை மக்கள் விடுக்கின்றனர்.

இவர்கள் தங்களது இந்த வேண்டுகோளை வைத்தியர்களிடமோ, ஆசிரியர்களிடமோ விடுக்கவில்லை. பொலிஸாரிடமே விடுக்கின்றனர்.

பொலிஸாருக்கு எவ்வளவு தான் ஏசினாலும், தனிப்பட்டவர்களை தூசித்தாலும் பொதுமக்களின் இந்த வேண்டுகோளை பொலிஸார்நன்றாகவிளங்கியே செயற்பட்டு வருகின்றனர்.– என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

# எனது அப்பாவை என்னுடன் சேருங்கள்

## திருச்சியில் தடுப்பிலுள்ள ஒருவரின் குழந்தையின் கோரிக்கை இது



திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளுக்கு கருணை காட்டுங்கள் என்று அவர்களது பெற்றோர்களும், மனைவிமாரும் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்போது ''எனது அப்பாவை என்னுடன் சேர்த்து வையுங்கள்'' என்று நான்கு வயதுப் பெண் குழந்தை அழுதவாறு கேட்டுக்கொண்டமை மனதை நெகிழ வைத்த சம்பவமாக காணப்பட்டது.

திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் பத்துப் பேர் மற்றும் மண்டபம் முகாமில் இருக்கும் ஒரு பெண் ஆகியோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்றுக் காலை பத்திரிகையாளர்களைச் சந்தித்து இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

''எனது மூத்த மகனை இறுதி யுத்தத்தில் பலி கொடுத்தேன். தற்போது இருக்கும் ஒரு மகன் தமிழ் நாடு சென்ற நிலையில் அங்கு வைத்து கைது செய்யப்பட்டு, திருச்சி முகாமில்தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர்களை அடித்துத் துன்புறுத்துகின்றனர். சட்ட ரீதியாக விசா எடுத்து சுற்றுலாவுக்குச் சென்ற மகனை சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வந்துள்ளார் என்றும் அது குறித்த ஆவணத்தில் ஒப்பமிடுமாறும் தொடர்ந்தும் துன்புறுத்தி வருகின்றனர்.

''யுத்தகாலத்தில் மிக மோசமாக மன உளைச்சலுக்கும், பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்த எங்களுக்கு, எங்களது பிள்ளைகள் உண்ணாவிரதம் இருந்து வருவதான செய்தி மனதளவில் பாதித்துள்ளது. எனவே அவர்கள் சிலவேளை ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் அதனை மன்னித்து தயவு செய்து விடுதலை செய்யுங்கள்.'' - இவ்வாறு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைத்திருக்கும் ஈழத்தமிழர்கள் பத்துப் பேரில் ஒருவரின் தந்தையான உமாகாந்தன் தெரிவித்துள்ளார்.

''நான் இரண்டு குழந்தைகளுடன் மிகவும்நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருகின்றேன். எனதுகணவர் கைது செய்யப்படும் போது இரண்டாவது குழந்தை ஏழு மாதம் வயிற்றில். தற்போது எனது குழந்தைக்கு அப்பாவின் முகம் தெரியாது. மூத்த மகளுக்கு நான்கு வயது. நாளாந்தம் அப்பா எங்கே என்று கேட்டுக் கொண்டே இருக்கின்றார். தயவுசெய்து எனது பிள்ளைகளுக்காக எனது கணவரை விடுதலை செய்யுங்கள்'' என்று அழுதார் ஒரு பெண். இந்துப்பெண்ணின் குழந்தை ''எனது அப்பாவை என்னுடன் சேர்த்து வையுங்கள்'' என்று அழுதது.

இதேவேளை, இந்தியாவுக்குச் சுற்றுலா வீசாவில் சென்றபோது கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்களும் அகதி முகாமிலுள்ள ஈழத் தமிழர்களும் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி திருச்சி விசேட முகாமில் கடந்த நான்கு நாள்களாக மேற்கொண்டுவந்த உணவு தவிர்ப்புபோராட்டம்தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

மாவட்டத் துணை ஆட்சியாளர் நடராஜன், சட்ட, ஒழுங்கு துணைக் காவல் ஆணையாளர் வீ. மந்திரமூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு பேச்சுகள் நடத்தியதை அடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (ஐ-70)



வெற்றிலைக்கேணியில் அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை அரச அதிபர் நா.வேதநாயகன் திறந்து வைத்தார்.

கிராமத்துக்கு ஏழு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு விழா மருதங்கேணிப் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச அதிபர் கட்டடத்தை திறந்து வைத்தார். (ஐ-35-40)



# கொடுக்குளாய் கடலேரியில் 5,000 கண்டல் தாவரங்கள்

## யாழ். அரசாங்க அதிபர் நட்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், டிசெ.28

சுனாமி ஆழிப்பேரலையின் 12 ஆவது ஆண்டின் நிறைவை முன்னிட்டு கொடுக்குளாய் கடலேரியில் 5 ஆயிரம் கண்டல் தாவரங்கள் நட்டு வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகம், மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தாளையடி, மற்றும் இயக்கச்சி ஆகிய பகுதிகளின் கடலேரிகளை பாதுகாக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தக் கண்டல் தாவரங்களை நடும் செயற்றிட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தாவரங்களை யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் மாவட்ட அனர்த்த உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி ஆகியோர் நட்டனர்.

இந்த நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10-40)

# உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் தமிழ்நேசன் அடிகளாருக்கு சிறப்பு விருது



கொழும்பில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் இறுதி நாள் நிறைவின்போது அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி சிறப்பு விருது வழங்கப்பட்டது.

கடந்த 11,12,13 ஆகிய மூன்றுதினங்களாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலரும் வருகை தந்திருந்தனர்.

இந்த மாநாட்டின் இறுதி நாள் நிறைவு அமர்வின்போது மன்னார் தமிழ்ச் சங்க ஸ்தாபகரும், மன்னார் மறை மாவட்ட 'கலையருவி' அமைப்பின் இயக்குநரும், 'மன்னா' என்ற மாதாந்தக் கத்தோலிக்கப் பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாருக்கு விருது வழங்கப்பட்டது.

அவருடைய தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, அவருக்குப் பொன்னாடை போர்த்தி சிறப்பு விருதும் வழங்கப்பட்டது. (ஐ)

# பருத்தித்துறை பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு







பருத்தித்துறை,டிசெ.28

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் அணிவகுப்பு மரியாதையும், வாகன பரிசோதனையும் நேற்று நடைபெற்றன.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதன் பின்னர் பொலிஸ் நிலையத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். பின்னர் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

அதன் பின்னர் பொலிஸ் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தார். இவ் வைபவத்தில் அவருடன் காங்கேசன்துறை பிராந்தியப் பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாசிங்க, வடமாகாண தமிழ் உத்தியோகத்தர்களுக்கான, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-40)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பங்காளிக் கட்சிகளுடன் பேசுங்கள்!

"அவசரமும், அவசியமும் கொடுத்து ஆராயப்பட வேண்டிய பல முக்கிய விடயங்கள் எழுந்துள்ளமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதுவித கால தாமதமும் இன்றிக் கூட்டுங்கள்." - இவ்வாறு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது.

இதே நிலைப்பாட்டில் தான் கூட்டமைப்பின் மற்றொரு பங்காளிக் கட்சியான புளொட்டும் இருப்பதாகத் தெரிகின்றது.

இப் பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியபடி, நமது தாயக மற்றும் இலங்கைத் தேசிய மட்டத்தில் அரசியல் விவகாரங்கள் மிகத் தீர்க்கமான கட்டத்தை எட்டியிருக்கின்றன.

இந்தச் சமயத்தில் மிக முக்கியமான, தெளிவான, திட்டவட்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலையில் தமிழ்க் கூட்டமைப்பு உள்ளது என்பது உண்மையே.

எனவே, அத்தகைய தீர்மானங்களை - முடிவுகளை - எதேச்சாதிகாரமாக எடுக்காமல், கூட்டமைப்பின் உயர்மட்டத்தில் கூடி ஆராய்ந்து, விவாதித்து, இறுதி செய்வதே பொருத்தமானதும், நியாயமானதும், ஜனநாயகபூர்வமானதும் ஆகும்.

இதனை, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு வேறு யாரேனும் கூறித்தான் புரிய வைக்கவேண்டும் என்பதல்ல. முதிர்ந்த - பழுத்த - மூத்த அரசியல்வாதியான அவருக்கு அது நன்கு தெரியும்.

தனது முடிவுகளையே - தீர்மானங்களையே - கூட்டமைப்பின் தீர்மானமாகவும் வெளிவரச் செய்வதற்கான சாணக்கியம், இராஜ தந்திரம் எல்லாமும் கூட அவரிடம் உள்ளன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் எல்லாம் - ஏன் அவர் அச்சமயம் தலைமை வகித்த இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட - அனைத்தும் மாகாண முதல்வர் வேட்பாளருக்கு மாவை சேனாதிராசாவை முன்நிறுத்தி வலியுறுத்தியபோது, அதே மாவை சேனாதிராசாவைக்கொண்டே, தனது தெரிவான ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கச் செய்தவர் சம்பந்தன்.

அந்தளவுக்கு கூட்டமைப்புக்குள்ளும், தமிழ்த் தேசிய அரசியலிலும் இன்று வலிமை, செல்வாக்கு, அதிகாரம், ஆளுமை கொண்டவராக சம்பந்தன் திகழ்கின்றார்.

அத்தகைய திறத்தவர், தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய காலகட்டம் நெருங்கும்போது கூட, கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டாமல் தவிர்த்து வருகின்றார் எனில், அதற்குள் உட்சூக்குமம் - உள்ளார்ந்தம் - அடங்கியிருக்கும் என்பதை ஊகிப்பது, அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் தீவிரப் படுத்தப்பட்டிருக்கின்றன. அது தொடர்பாக அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றத்துக்கு, அதன் அரசமைப்பு விவகார வழிகாட்டல் குழு சமர்ப்பிக்கக் கோரும் இடைக்கால அறிக்கை ஜனவரி 10 ஆம் திகதியளவில் நாடாளுமன்றில் எடுத்துக் கொள்ளப்படக்கூடும் எனக் கருதப்படுகின்றது; எதிர்பார்க்கப் படுகிறது.

அதற்கு சரியாக 48 மணி நேரத்துக்கு முன்னர், தமிழ்க் கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரு கூட்டத்துக்கு வரும்படி சம்பந்தன் அழைத்திருக்கின்றார். கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் அவர் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

பல விடயங்களை வெளிப்படையாகவும், சகல தரப்பினருடனும், பகிரங்கமாகப் பேசுவது அந்த விடயங்களை இறுதி வரை நகர்த்தி ஒப்பேற்றுவதில் பின்னடைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும் என சம்பந்தன் கருதியிருக்கலாம். எனவே, அத்தகைய விடயங்களைக் கவனத்தில் கொண்டு தந்திரோபாய நகர்த்தலாக கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களோடு அவற்றைப் பகிரங்கமாகக் கலந்துரையாடுவதை அவர் தவிர்த்திருக்கக்கூடும்.

எது, எப்படியாயினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு ஜனநாயகக் கட்டமைப்பு. அதில் சர்வாதிகாரத்துக்கும், தனித்த எதேச்சாதிகாரத்துக்கும் இடமில்லை.

கூட்டமைப்பு ஜனநாயக ரீதியில் இயங்குகின்றது என்பதை உலகுக்குக் காட்டவேனும், இது விடயத்தில் அவர் கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவப் பங்காளிகளுடன் கலந்துரையாடுவது கட்டாயமாகும். அதைத் தவிர்ப்பது கூட்டமைப்பு எதேச்சாதிகாரப் பாணியில் நகர்கின்றது என்ற கருத்தையே வலுப்படுத்தும்.

இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தான் இணக்கப்பாடு கண்ட விடயத்தை அரசு நடைமுறைப் படுத்துவதற்கு, தேவையான சில நிபந்தனைகளோடு மேலும் ஒரு வருட கால அவகாசம் வழங்குவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு தயார் என்ற அறிவித்தல், கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவப் பங்காளிகளுக்கு தெரியப்படுத்தப்படாமலேயே கூட்டமைப்பு சார்பில் அதன் பேச்சாளர் சுமந்திரன்மூலம் அறிவிக்கப்படுகின்றது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அதனைப் பத்திரிகையில் பார்த்துத்தான் அறியவேண்டி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில், பெயருக்காவது கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சிகளை ஒன்று கூட்டிப் பேசுவது, சம்பந்தனின் கட்டாயக் கடமை ஆகும்.

# வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறை 100 வீதம் வடக்கில் தீர்க்கப்படவில்லை

## மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.28

வடமாகாணத்தில் வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக் குறைக்கு பெருமளவு தீர்வு காணப்பட்டிருந்தாலும் 100 வீதம் 'தீர்க்கப்படவில்லை. மாகாணத்துக்கு 106 வைத்தியர்களும், 122 தாதிய உத்தியோகத்தர்களும் தேவையாக உள்ளனர்.

இவ்வாறு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான வடமாகாண சபையின் வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை முன்மொழிந்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மாகாணத்தில் 110 வைத்தியசாலைகள், 5 மார்பு நோய்ச் சிகிச்சை நிலையங்கள், 5 பால்வினை நோய்ச் சிகிச்சை நிலையங்கள், 30 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், 26 பாடசாலை பற்சிகிச்சை நிலையங்கள், 5 பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனைகள் காணப்படுகின்றன.

காங்கேசன்துறை, ஆனையிறவு ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள் உட்பட 110 வைத்தியசாலைகள் போரால் பாதிக்கப்பட்டதால் தற்போது இயங்கமுடியாத நிலையில் காணப்படுகின்றன.

இவை பௌதீக மற்றும் மனிதவளப் பற்றாக்குறை காரணமாக முழுமையான அபிவிருத்தியை அடைய முடியாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக மனிதவள பற்றாக் குறையில் குறிப்பாக 729 வைத்தியர்களும், 826 தாதிய உத்தியோகத்தர்களும் இருக்க வேண்டும்.

ஆனால் 623 வைத்தியர்களும், 704 தாதிய உத்தியோகத்தர்களுமே கடமையில் உள்ளனர்.கடந்த 2015ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையிலும் பார்க்க 2016 ஆம் ஆண்டு அதிக எண்ணிக்கையான வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர் எனினும் தொடர்ந்தும் பற்றாக்குறை காணப்படுகின்றது.-என்றார்.

# முப்படைகளிலும் இருந்து விலக 4 ஆயிரத்து 658 பேர் விண்ணப்பம்

சட்ட ரீதியாக அனுமதி பெறாமல் விடுமுறையில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான முப்படையினர் தமது சேவைத் தலைமையகத்துக்குச் சமுகமளித்து சட்டபூர்வ ஆவணங்களை சமர்பித்து சட்ட ரீதியாக இந்த மாதத்துக்குள் விலகிச் செல்வதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்ட ஒரு மாத கால பொதுமன்னிப்பு காலம் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டதில் இருந்து டிசெம்பர் 26 ஆம் திகதி வரை 7 இராணுவ அதிகாரிகள் அடங்கலாக 4 ஆயிரத்து 658 பேர் உத்தியோகபூர்வமாக இராணுவத்திலிருந்து விலகிக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

2 கடற்படை அதிகாரிகள், 424 கடற்படை வீரர்கள், 16 விமானப்படை அதிகாரிகள் 195 விமானப்படை வீரர்கள் ஆகியோர் சட்ட ரீதியாக விலகிச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு ஊடக மையத்தின் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பொது மன்னிப்பானது இந்த வருடம் முப்படைகளிலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாவது பொதுமன்னிப்புக் காலமாகும். முதலாவது பொதுமன்னிப்புக் காலம் ஜூன் 13 இலிருந்து ஜூலை 12 வரை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சேவையிலிருந்து விலக விரும்பும் படைவீரர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சேவைமையங்களுக்கு அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (ஐ)

# கடவுள்களது பெயரைக் கூறி முகநூல் ஊடாக பணம் பறிப்பு

## அவதானமாக இருக்குமாறு பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28

பல்வேறு பெயர்களில் புதுப் புது அமைப்புகள் உருவாக்கப் பட்டு கடவுள்களின் பெயர்களைக் கூறி முகநூல் மூலம் பணம் திரட்டப்படுகின்றது. இந்த விடயத்தில் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பௌத்தத்தை காக்க வேண்டி புதிதாக படைகள் வந்துள்ளன. ஆனால், இப்போது அதற்கான எந்தவிதமான தேவையும் இல்லை.

தற்போது முகநூல் மூலமாகப் பல கொள்ளைக் கூட்டங்கள் பணச் சேகரிப்பு வியாபாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

புதுப்புது அமைப்புகளும், சிங்களே எனவும் பௌத்தம் காக்கவும் பல அமைப்புகள் வந்து போலியாக பணம் வசூலித்து வருகின்றன. இவ்வாறான போலிகளுக்கு எவரும் ஏமாந்துவிடாதீர்கள்.

அதேபோல நாட்டில் மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. உண்மையாக மதங்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும். அதற்காக பணம் சேர்த்து போலியாக எவரும் செயற்படவேண்டாம்.

துன்பப்படும் மக்களுக்கு உதவி செய்யுங்கள்.

இந்த நாட்டில் இருக்கும் பணம் படைத்தவர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தலையும் நான் விடுக்கின்றேன். அதாவது உங்களது பணத்தை வெறுமனே செலவு செய்யாதீர்கள். துயரப்படும் மக்களுக்குக் கொடுங்கள். அது கோடிக் கணக்கான புண்ணியத்தை சேர்த்துக் கொள்ளும் செயல். புத்தரின் போதனையும் அதுவே.

கடவுள்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டாம் அதனை நிறுத்திக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். நாம் மூன்று வேளை உண்டால் மட்டும் போதாது, ஏழைகளுக்கும் உதவ வேண்டும்.

நான் என்னால் முடிந்த உதவிகளை அதற்காக செய்கின்றேன். எந்த நேரம் வேண்டுமானாலும் என்னுடன் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம்.

அதேபோன்று எந்த நிலையிலும் குடும்ப பாரத்தைக் கணக்கில் கொண்டு தற்கொலை செய்து கொள்ளவோ அல்லது தவறான முடிவுகளையோ எடுக்க வேண்டாம்.-என்றார்.

இதன்போது, நில்வளகங்கையில் குடும்பத்துடன் தற்கொலை செய்ய முயற்சித்த குடும்பத்துக்கு - கணவனை இழந்த பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா காசோலையை பிரதியமைச்சர் வழங்கினார்.(ஐ)

### நாளை

29.12.2016
வியாழக்கிழமை
திதி : அமாவாசை பி.ப. 1.13 வரை
நட்சத்திரம்: மூலம்
பி.இ. 12.21 வரை
சுபநேரம் : 7.58 – 9.28
இராகுகாலம் : 1.58 – 3.28

# மருத்துவபீடக் கற்கை நெறிக் கட்டடம் குறித்து யாழ். போதனா ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிக்கை

நேற்று முன்தினம் திங்கட்கிழமை 'காலைக்கதிர்' நாளிதழின் முன்பக்கத்தில் வெளியான ஒரு செய்தியை மறுக்கும் விதத்தில் 'காலைக்கதிர்' பெயர் குறிப்பிடாமல் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி.

'மருத்துவபீடக் கற்கை நெறிக் கட்டடத் தொகுதி போதனா வைத்தியசாலை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

மேற்படி கட்டடத் தொகுதி யாழ். போதனா வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் மருத்துவ பீடத்துக்கு ஒதுக்கப்பட்ட 4 பரப்புக் காணியில் அமைக்கப்பட உள்ளது.

இக் கட்டடத் தொகுதி உயர்கல்வி அமைச்சின் 720 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட உள்ளது. 8 மாடிகளைக் கொண்ட இக் கட்டடத் தொகுதியில் மருத்துவ பீடக் கற்கை நெறிகளுக்கான பல்வேறு பிரிவுகளின் காரியாலய அலகுகளும் மாணவர்களுக்குக் கற்கை வசதி வழங்கக் கூடிய அலகுகளும் அமைய உள்ளன.

இக் கட்டடத்தின் ஒரு தளத்தில் அமைய இருக்கும் சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் ஆய்வு கூட வசதிகள் பற்றிக் கருத்து முரண்பாடு எழுந்தது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து சுமுகமான முடிவு எட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் சில ஊடகங்களில் திரிவுபடுத்தப்பட்டு செய்திகள் வெளிவந்தன. எனினும் அவ்வாறு இக்கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு வைத்தியர்களோ ஏனையவர்களோ முட்டுக்கட்டை ஏற்படுத்தவில்லை. அத்துடன் இக்கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு அனைத்து ஊழியர்களும் பூரண ஆதரவை வழங்குவார்கள்.

இக் கட்டடத்தின் கட்டுமான அமைப்பு வேலைகள் யாழ். மருத்துவ பீட நிர்வாகத்தின் கீழ் அமையும். எனினும் நோயாளர் சேவைப் பிரிவுகள் இயங்கும் போது அவை முழுமையாக வைத்தியசாலைப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

மருத்துவ மாணவர்களின் கற்கை நெறியில், பயிற்சியில் யாழ். மருத்துவ பீடம் முக்கியமான பங்கை வகிக்கிறது. அதேவேளை குறிப்பாக வைத்தியசாலை நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானது. அந்த வகையில் அவர்கள் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவார்கள்.

அத்துடன் இக்கட்டடத் தொகுதி யாழ். போதனா வைத்தியசாலையின் பயிற்சி வழங்கும் திறனை அதிகரிப்பதுடன் அனைவரும் வேறுபாடின்றி பயன்படுத்தக் கூடிய நிலையமாக அமையும்.- என்று உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

*1.இந்த விடயம் தொடர்பான செய்தி 'ரூ.72 கோடியில் நவீன சிகிச்சைக் கூடம் யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்க எதிர்ப்பாம்; 8 மாடிக் கட்டடத்தின் திட்டத்துக்கு ஆப்பு வைக்கும் வைத்தியர்கள்'- என்ற தலைப்பில் நேற்று முன்தினம் காலையில் 'காலைக்கதிர்' நாளிதழில் வெளியானது.*

*2.அதற்குப் பதிலளிக்கும் விதத்திலான மேற்படி அறிக்கை உடனடியாகவே நேற்று முன் தினம் திகதியிடப்பட்டு வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு அந்தப் பத்திரிகைகளில் நேற்றே பிரசுரமாகியுள்ளது.*

*3.அவை பிரசுரமான பின்னர், நேற்று அந்த அறிக்கை 'காலைக்கதிர்' செய்தியாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.*

*4.வைத்தியர் சத்தியமூர்த்தி அண்மைக் காலத்தில் சிறந்த நிர்வாகி என்று பெயரெடுத்து வருகின்றவர். ஓர் ஊடகத்தில் வந்த செய்திக்கு மறுப்பு, திருத்தம் அல்லது தெளிவுபடுத்தல் செய்வதாயின் முதலில் அந்த ஊடகத்துடன் தொடர்பு கொண்டு அதைச் செய்வதே நியாயமானது என்பதை நாங்கள் சுட்டிக் காட்டித்தான் அவருக்குத் தெரிய வேண்டும் என்பதல்ல. பழுத்த அனுபவமும், தேர்ந்த நிர்வாகமும் தெரிந்த அவரின் சார்பில் அறிக்கை ஒன்று - அதுவும் 'காலைக்கதிர்' நாளிதழின் செய்திக்கு திருத்தம் கோருவது போன்றதொரு அறிக்கை- 'காலைக்கதிர்' இதழைப் புறக்கணித்து அனுப்பப்பட்டமை எமக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.*

*5.நேற்றுமுன்தினம் வெளியான எமது முதற்பக்கச் செய்தி சரியானது என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம். மருத்து பீடத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில், உயர்கல்வி அமைச்சால் ஒதுக்கப்பட்ட 72 கோடி ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இந்தக் கட்டடத்தில் சத்திர சிகிச்சைக் கூடம், ஆய்வுகூடம் என்பன அமைவது தொடர்பில் ஆட்சேபம் தெரிவித்தும், அந்தப் பணிமுன்னெடுக்கப்பட்டால் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சிகளைப் வழங்க மாட்டோம் என்றும் எதிர்ப்பு வைத்தியர் குழாம் ஒப்பமிட்டு துணைவேந்தருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியது என்பதை மீள உறுதிப்படுத்துகிறோம். (ஆ-ர்)*


## நன்னீர் மீன்பிடியில் முன்னேற்ற நிலை

நன்னீர் மீன்பிடித்துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் நன்னீர் மீன் வளர்ப்பு 4.1 சத வீதம் வளர்ச்சியை இந்த ஆண்டில் பதிவு செய்துள்ளது. நாட்டில் நிலவிய வறட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்த நிலையில் இந்த வளர்ச்சிபதிவுசெய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

நன்னீர் மீன்பிடித்துறை அடுத்த ஆண்டு 8 வீதத்தை தாண்டிய வளர்ச்சியை பதிவு செய்யும். 2017 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடி அபிவிருத்திக்குநடைமுறைப்படுத்தவுள்ள 'வாவியுடன் பயணம்' எனும் வேலைத் திட்டத்துக்கு 300 மில்லியன் ரூபா மத்திய அரசாலும், மேலும் 300 மில்லியன் ரூபா இந்திய அரசாலும் வழங்கப்பட்டுள்ளது.- என்றார். (ஐ)



திடீரென ஏற்படும் வெள்ள அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில், இலங்கைக் கடற்படையினரால் காற்று சக்தி படகொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு கடற்படை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அபிவிருத்திப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை 1.7 மில்லியன் ரூபாவாகும்.

நீரில் மூழ்கிய பிரதேசங்களை இலகுவாக நெருங்கி, பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றக் கூடிய வகையில் இந்தப் படகு தயாரிக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கையில்லாத மேலாடை அணிந்து நாடாளுமன்றம் வந்தவர் தடுப்பு

கொழும்பு, டிசெ.28

கையில்லாத வகையில் மேலாடை (ரவிக்கை) அணிந்து வந்த பெண் பணியாளர் ஒருவரை நாடாளுமன்ற அதிகாரிகள் அண்மையில் தடுத்துள்ளனர்.

உரிய வகையில் அவர் கையை பாதியளவில் மறைக்கக்கூடிய ரவிக்கையை அணியாமல் நாடாளுமன்றத்துக்கு வந்தமையே இதற்கான காரணமாகும்.

நாடாளுமன்றத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்கள் புடைவையுடன் நீளமான ரவிக்கையை அணிந்து வர வேண்டும் என்ற நியதி கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பெண் பணியாளர் தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிராமன் சல்வார் அணிந்து வந்திருந்த நிலையில் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மா, அபாயா அணிந்து வந்த நிலையில் முற்கூட்டியே பெற்றுக் கொண்ட அனுமதியின் அடிப்படையில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஊடகத்துக்கு தகவல் வழங்குவதை தடுப்பது முட்டாள்தனமான செயல்

### சோசலிச மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28

பொலிஸ் தகவல்களைத் தனியார் ஊடகங்களுக்கு வழங்குவதைத் தடை செய்யும் பொலிஸ்மா அதிபரின் தீர்மானம் முட்டாள் தனமான தீர்மானமாகும்.

ஊடகங்களுக்கு வழங்கப்படாத பொலிஸ் தகவல்கள் யாருக்குவழங்கப்படவுள்ளது.

இவ்வாறு சோசலிச மக்கள் முன்னணிக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டு மக்களுக்கு உண்மையான தகவல்களை ஊடகங்களே வழங்கி வருகின்றன. பொலிஸாரிடம் காணப்படும் தகவல்கள் ஊடகங்களுக்கு வழங்கப்படாவிட்டால் அந்தத் தகவல்கள் யாருக்கு வழங்கப்படும்?

இந்த விடயம் தொடர்பில் ஊடக அமைச்சர் மற்றும் பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் பேச்சு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சோசலிச மக்கள் முன்னணி அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

### தனியார் ஊடகங்களுக்கு

## தகவல் வழங்காதுவிட்டால் வழக்குத் தாக்கல் செய்யலாம்

கொழும்பு, டிசெ.28

பொலிஸ்மா அதிபர்தனியார் ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்காவிட்டால் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சித் தலைவரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்கள் சேவையில் ஈடுபடுபவர் என்ற வகையில் அரச ஊடகங்களுக்கு வழங்கும் செய்தியை தனியார் ஊடகங்களுக்கும் வழங்கக் கட்டுப்பட்டுள்ளார்.

அரச ஊடகங்களுக்கு வழங்கும் தகவல்களை பொலிஸ்மா அதிபர் தமக்கு வழங்குகிறார் இல்லை என்று அரசியல் அமைப்பின் 12(1) அத்தியாயத்தின்கீழ் தனியார் ஊடகங்கள் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு வொன்றை தாக்கல் செய்யலாம்.

அவ்வாறு தாக்கல் செய்தால், அரச ஊடகங்களுக்கு வழங்கும் அனைத்து தகவல்களையும் தனியார் ஊடகங்களுக்கும் வழங்க வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிடும். ஊடகவியலாளர் எவராவது உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்தால் சட்ட உதவிகளை வழங்க எம்மால் முடியும்.-என்றார். (ஐ)

# முஸ்லிம் எம்.பிக்கள் 21 பேரும் ஒன்றிணைந்தால் ஆட்சி கவிழும்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஆருடம்



ஏறாவூர்,டிசெ.28

தொகுதிவாரியான தேர்தல் சட்டமூலம் நாடாளுமன்றில் கொண்டுவ்ரப்பட்டால் முஸ்லிம் மக்களது பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைவடையும். அவ்வாறான ஒரு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் 21 முஸ்லிம் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து அதனை எதிர்க்க வேண்டும். நாம் ஒன்றிணைந்தால் இலங்கையின் ஆட்சி பீடத்தையே மாற்றியமைக்க -ஆட்சியைக் கவிழ்க்க முடியும்.

- இவ்வாறு புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏறாவூர் ஆதார வைத்திய சாலைக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் காங்கிரஸ் சமூகத்தின் உரிமைகளுக்காக வடக்கு கிழக்கில் உரத்துப் பேசினால் தமிழ் மக்களுடைய எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி ஏற்படும். வடக்கு கிழக்குக்கு வெளியே பேசினால் சிங்கள சமூகம் மத்தியில் அதிருப்தி ஏற்படும். அந்த இரண்டு சமூகங்களையும் திருப்திப்படுத்திக் கொண்டிருந்தால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்ட தலைமைத்துவமாகும். அவர்கள் சமூகத்தின் உரிமைகளைப் பற்றி பேசாமல் அமைதியாக இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சியினரும், சுதந்திரக் கட்சியினரும் அந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி எதனையும் வழங்காமல் மௌனமாகி விடுவார்கள்.

நாட்டில் எதிர்வரும் ஆண்டு சட்ட ரீதியான பல மாற்றங்கள் முன்மொழியப்படவுள்ளன.

எதிர்வரும் ஆண்டிலே முஸ்லிம்களுடைய பிரதிநிதித்துவத்தை வெகுவாகக் குறைக்கும் தொகுதி வாரியான நாடாளுமன்ற தேர்தல் சட்டமூலம் கொண்டுவரப்படவுள்ளது. இந்த சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக சமூகத்தின் நிலைப்பாட்டை தெளிவாகப் பேச வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பாக திருத்தங்களைக் கொண்டு வந்து தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.நாடாளுமன்றத்தை முடக்க முடியுமாக இருந்தால் அதனையும் செய்யவேண்டும். நாடாளுமன்றத்தில் உள்ள 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியேறினால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்க முடியாது. தற்போது முஸ்லிம் சமூகத்தின் அதிகரித்த பிரதிநிதித்துவம் காரணமாகவே எங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.-என்றார். (ச)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 7,891 அபிவிருத்தித் திட்டங்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்ட 11 ஆயிரத்து 968 அபிவிருத்தித் திட்டங்களில் 7 ஆயிரத்து 891 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது இந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அவற்றின் முன்னேற்றம் மற்றும் அடுத்த வருடத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. (ச)

# கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன

ஆரையம்பதி,டிசெ.28

ஆரையம்பதிப் பிரதேச சபைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு, கிரான்குளம் ஆகிய கிராமங்களின் பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளாக நடமாடிய சுமார் 75 மாடுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிடிக்கப்பட்டன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகள் ஆரையம்பதிப் பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன. ஒரு மாட்டுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்தி மாடுகளை அவற்றின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)


# அபிவிருத்தி கூட்டத்தில் தொலைபேசிக்கு தடை!

மட்டக்களப்பு,டிசெ.28

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டத்துக்குச் சென்ற பிரதேச செயலாளர்களுக்கு கைத்தொலைபேசியை எடுத்துச் செல்ல மாவட்டச் செயலக நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டத்துக்குச் சென்ற பிரதேச செயலாளர்களுக்கே இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ச)

# கிழக்கின் பதில் முதலமைச்சராக தண்டாயுதபாணி நியமனம்



திருகோணமலை,டிசெ.28

கிழக்கு மாகாணசபையின் பதில் முதலமைச்சராக மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ முன்னிலையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பதவி பிரமாணம் செய்துகொண்டார்.

கிழக்கு மாகாணத்துக்கான வெளிநாட்டு முதலீடு தொடர்பான கலந்துரையாடலுக்காக மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ஈரானுக்கு பயணமாகியுள்ளார். இந் நிலையிலே பதில் முதலமைச்சராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# பொலிஸ் சாவடிகள் உள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் ஆர்.துரைரெட்ணம் வேண்டுகோள்

மண்டூர், பாலமுனை பகுதிகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சாவடிகள் அகற்றப்பட்டு காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸ் சாவடி அமைந்துள்ள காணிகள் இந்த மாதத்துடன் விடுவிக்கப்படும் என்று கடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்னும் விடுவிக்கப்படுவதற்கான எந்த ஏற்பாடும் நடைபெறவில்லை.

மீள்குடியேறிய மக்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே, பொதுமக்களின் காணிகளில் இருந்து பொலிஸார் வெளியேற வேண்டும்.-என்றார். (ச)

# திருமலையில் டோக்கியோ சிமெந்து உற்பத்தி

திருகோணமலை,டிசெ.28

திருகோணமலையில் டோக்கியோ சிமெந்து நிறுவனம் புதிய சிமெந்து தயாரிப்பு நடவடிக்கைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ள உள்ளது .

டோக்கியோ சிமெந்து நிறுவனம் தனது 4ஆவது உற்பத்தி நிறுவனமாக இதனை ஆரம்பிக்கவுள்ளது. நவீன தொழில் நுட்பங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு,டிசெ.28

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டது.

கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சின்னத்தம்பி சுவந்தினி (வயது 24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இது தொடர்பான விசாரணைகளை கொக்கட்டிச் சோலைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)





கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பன்மைத்துவ கலாசார நிகழ்வு உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

பண்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சிவிரியா வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ , கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.த்ண்டாயுதபாணி ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தமையையும் , மட்டக்களப்பு மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (ச)

# விசேட அபிவிருத்திகள் சட்டமூலத்துக்கு தென், சப்ரகமுவ மாகாணங்களும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.28

விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்ட மூலத்தை தென் மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை ஆகியன நிராகரித்துள்ளன.

நேற்றைய தினம் தென் மாகாண சபையில் இந்தச் சட்ட மூலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 19 உறுப்பினர்கள் எதிராகவும் 14 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர்.



அதேவேளை, விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்ட மூலம் குறித்து சப்ரகமுவ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 20 உறுப்பினர்கள் எதிராகவும் 13 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர்.

இரு மாகாண சபைகளில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்டமூலம் குறித்து கடந்த வாரம் வட மத்திய மாகாண சபையில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 10 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் கிடைத்தன.

ஊவா மாகாண சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 9 வாக்குகளும், எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன.

அதேவேளை, வடமாகாண சபை இந்தச் சட்டமூலத்தை ஏகமனதாக நிராகரித்திருந்தது. அத்துடன் கிழக்கு மாகாண சபையும் இந்தச் சட்ட மூலம் தொடர்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்ட மூலம் தொடர்பில் மாகாண முதலமைச்சர்களுக்கும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம் பெற்றது. இதன்போது, அபிவிருத்திக்கான விசேட சட்டமூலத்தின் மூலம் மாகாண சபைக்கு உட்பட்ட விடயங்களை மத்திய அரசாங்கத்துக்குள் உள்வாங்கப் பட மாட்டாது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹரகம விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.28

மஹரகம ஆசிரியர் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மஹரகம விருந்து கொட்டாவை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியொன்று பாதையை விட்டு விலகி எதிர் திசையில் வந்த மோட்டார் வாகனத்துடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், விபத்தில் உயிரிழந்துள்ளவர்கள் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் எனவும் அவர்கள் பதுளை மற்றும் மொனராகலைப் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தில் காயமுற்ற இருவரும் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் 32 மற்றும் 37 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்துத் தொடர்பில் மோட்டார் வாகனத்தின் சாரதியை, மஹரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பு ரயில் நிலையத்தில் குண்டுப் புரளியால் பரபரப்பு




கொழும்பு, டிசெ.28

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணிக்கவிருந்த ரயிலில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக எழுந்த புரளியை அடுத்து கொழும்பு ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு பரபரப்பு ஏற்பட்டது.


119 என்ற இலக்கத்தினூடாக பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து பதுளை நோக்கிப் பயணிக்கவிருந்த ரயிலில் இருந்து பயணிகள் முழுமையாக வெளியேற்றப்பட்டனர்.

ரயில் பெட்டியொன்றிலுள்ள பொதியில் குண்டுவைக்கப்பட்டுள்ளதாக அவசர அழைப்பை ஏற்படுத்திய பயணியொருவர் கூறினார் என ரயில்வே பாதுகாப்புப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மற்றும் மோப்ப நாய்கள் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டு, சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் சந்தேகத்துக்கிடமான பொதிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், ரயிலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பதுளைக்கான பயணம் மேற்கொள்ளப் பட்டுள் ளது. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பயணிகளின் பொதிகளை சோதனைக்கு உட்படுத்தியதுடன், இரவு 10.30 அளவில் அந்த ரயில் பதுளைக்கான பயணத்தை ஆரம்பித்திருந்தது.

## புதிய அரசமைப்பில் வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது வெறும் புரளி

*அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.28

புதிய அரசமைப்பின் மூலம், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படவோ, ஒற்றையாட்சிக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்படவோ மாட்டாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மாத்தறை கோட்டேகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரமாறு:-

அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கியே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமே தவிர எவரும் நினைத்தபடி இதில் மாற்றங்களைச் செய்ய முடியாது. அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசமைப்பின்மூலம் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்படும் என ஒரு சிலர் புரளியை ஏற்படுத்தி வருகின்றனர். இதில் எந்த உண்மையும் இல்லை.

புதிய அரசமைப்பின்படி நாடு ஒன்பது துண்டுகளாக பிரிக்கப்படமாட்டாது. வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப் பட மாட்டாது.

அரசாங்கம் ஒருபோதும் சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகம் செய்யாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தப்பட மாட்டாது. இதை மக்கள் நம்ப வேண்டும். என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனவரி 3 இல் நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கை!

கொழும்பு, டிசெ.28


நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கை எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அதே நாளில் இந்த அறிக்கை, இணையத்தளத்தில் பகிரங்கமாக வெளியிடப்படும் என்று, நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் செயலர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

தமது செயலணி பல்வேறு சமூகங்களுடன் நடத்திய நேர்காணல்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள், குழுநிலை விவாதங்கள், மூலம், 7500 யோசனைகளைப் பெற்றுள்ளளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைகளின் அடிப்படைகள் தமது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியம் கடந்த ஜனவரி மாதம் 26ஆம் நாள் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆந்திர பிரதேச முதல்வருக்கு ஜனாதிபதி மைத்திரி அழைப்பு



கொழும்பு, டிசெ.28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆந்திர பிரதேச முதல்வர் என்.சந்திரபாபு நாயுடுவுக்கு இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தேசிய அரசாங்கத்தின் இரண்டாம் வருட பூர்த்தி நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலும், 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வளர்ச்சி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் வறுமை ஒழிப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது என்றும் அந்த அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வறுமையை ஒழிப்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடல்கள் இடம் பெற்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தேசிய அரசாங்கத்தின் முதலாவது ஆண்டு பூர்த்தியின் போது முன்னாள் மேற்கு வங்காள ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளில் நெற் பயிர்கள் அழிவடையும் நிலையில்

## சீரான மழையின்மையே காரணம் என்று விவசாயிகள் பெரும் கவலை

முல்லைத்தீவு, டிசெ.28

மழையின்மை காரணமாகத் துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கமநலசேவை நிலையங்களுக்கு உட்பட்ட சுமார் 12 ஆயிரத்து 198 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் அழிவடையும் நிலையை எதிர் நோக்கியுள்ளன என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழை வீழ்ச்சியின்மை காரணமாகக் குளங்களில் நீர் வற்றிப் போனமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அவ ர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், நுண்நிதிக் கடன் நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியாரிடம் வட்டிக்குப் பணம் பெற்று நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள், அதனை மீள எவ்வாறு செலுத்துவது என்று அச்சத்தில் உள்ளனர்.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குளக் காணிகளில் 895 ஏக்கரிலும், மானாவாரியாக 247 ஏக்கரிலும் வவுனிக்குளம் வலது கரை வாய்க்காலின் கீழ் 2 ஆயிரத்து 18 ஏக்கரிலும் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உட்பட்ட நடுத்தர குளங்களின் கீழ் 3ஆயிரத்து 562 ஏக்கரிலுமாக மொத்தம் 6 ஆயிரத்து 736 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்களே இவ்வாறு அழியும் நிலையை எதிர்கொண்டுள்ளன.

இதேபோல் பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குளக்காணிகளில் ஆயிரத்து 827 ஏக்கரிலும் மானாவாரியாக 259.25 ஏக்கரிலும் வவுனிக் குளம் இடது கரை வாய்க்கால் உட்பட நடுத்தரக் குளங்களின் கீழ் 3 ஆயிரத்து 389.5 ஏக்கரிலுமாக மொத்தம் 5ஆயிரத்து 476.5 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இப்பயிர்களும் அழிவின் விளிம்பில் உள்ளன.

ஒட்டுமொத்தமாக12 ஆயிரத்து 198.5 ஏக்கரில் மேற்கொண்ட நெற் செய்கை அழிவடையும் நிலையில் உள்ளது.

அரசின் புள்ளி விவரத் திணைக்களத்தின் தகவலில் முல்லைத்தீவு மாவட்டம் வறுமை நிலையில் முதலிடத்தில் உள்ளது. மாவட்ட ரீதியாக துணுக்காய், பாண்டியன் குளம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான மக்கள் வறுமையில் வாழ்கின்றனர் எனக் கூறப்பட் டுள்ளது. இந்த நிலையில், இயற்கையும் இந்த முறை ஏமாற்றி விட்டதால் மக்கள் விரக்தியின் விளிம்பில் உள்ளனர். இதே வேளை, மழை வேண்டி இப் பகுதி மக்கள் இறை வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வறட்சியால் முல்லைத்தீவு பிரதேசம் பாலைவனமாகும் அபாயத்தை அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் குடிப்பதற்கு சுத்தமான நீர் அற்ற நிலையில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். கால்நடைகளும் குடிப்பதற்குத் தண்ணீர் இன்றி அலைகின்றன.

பசுமை நிறைந்த முல்லைத் தீவில் இந்த மாதம் ஏற்பட்டுள்ள வறட்சி, மாவட்டத்தின் எதிர் கால பொருளாதார நிலையைக் கேள்விக் குறியாக்கி உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேநிலை தொடருமாக இருந்தால் ஜீவராசிகள் அழிவடையும் ஆபத்தான கட்டத்தை அடையும் எனவும் பல்வேறு தரப்பினரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு நேற்று ஒரு தொகுதி அலுமாரிகள் வழங்கப்பட்டன.

வடமாகாண சபை உறுப்பினர் ஜீ. குணசீலன் தனது மாகாணசபை குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த உபகரணங்களை வழங்கினார்.

பாடசாலையின் அதிபரிடம் அலுமாரிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# கால்நடை வளர்ப்போருக்கு ஊக்குவிப்புக்கான உதவிகள்

## முசலி, மாந்தை மேற்கு பிரதேசபயனாளிகளுக்கு

மன்னார், டிசெ.28

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 'தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத் திட்டத்தின்' கீழ் கால்நடை வளர்ப் போருக்குப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போர் 40 பேருக்கு கால்நடைகளை வளர்ப்பதற்குத் தேவையான பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் உயிலங்குளம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் முதலில் முசலி வேப்பங்குளம் கால்நடை வைத்திய அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 கால் நடைவளர்ப்பாளர்களுக்கு கால்நடைகளை அடைத்துப் பராமரிக்கும் கொட்டகைகள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டன. இதன்போது மாடு வளர்க்கும் பயனாளிகள் 10 பேரும், ஆடு வளர்க்கும் பயனாளிகள் 10 பேரும் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பெறும தியான கொட்டகைகள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

அந்தப் பொருள்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ஜீ.குணசீலன் மற்றும் உயிலங்குளம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், முசலி கால்நடை வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 20 கால்நடை வளர்ப்போருக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வண்ணாங் குளம் கால்நடை வைத் திய அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளில் ஆடு வளர்க்கும் 10 பயனாளிகளுக் கும், மாடு வளர்க்கும் 10 பயனாளிகளுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கொட் டகைகள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

குறித்த பொருள்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலா நிதி ஜீ.குணசீலன் மற்றும் அதிகாரிகள் இணைந்து வழங்கினர்.

## பிறந்த தினத்தில் வாழ்வாதார உதவி

புலம்பெயர் உறவான சுவிஸ் நாட்டில் வசிக்கும் பேரம்பலம் சத்தியசீலன், தனது பிறந்த தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் கணவனை இழந்த பெண் ஒருவருக்கு சுய தொழில் ஊக்குவிப்புக்காக கிளிநொச்சி உதவும் உறவுகள் அமைப்பின் ஊடாக ஐம்பதாயிரம் ரூபா பணத்தை அண்மையில் வழங்கினார். அத்துடன்மேலும் இரு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

அத்துடன் திருமதி சத்தியசீலன் தம்பதியினர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் தம்மால் இயன்ற உதவிகளை உதவும் உறவுகள் அமைப்பின் ஊடாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)

# தொழில் பயிற்சி விழிப்பூட்டல் வீதி நாடகம் செட்டிகுளத்தில்



வவுனியா,டிசெ.28

செட்டிகுளம் வீரபுரத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆர்.டி.எப். நிறுவனத்தின் ஏற்பாட்டில் விழிப்பூட்டல் நாடகம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில்பயிற்சி தொடர்பாக இந்த விழிப்பூட்டல் நாடகம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நாடகம் வேலையில்லாப் பிரச்சினை, இளைஞர்-யுவதிகளை செயற்றிறன்மிக்கவர்களாக மாற்றல் மற்றும் தொழில் பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது என்று நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் தெரிவித்தார்.

அத்துடன் தொடர்ச்சியாக இவ்வாறான விழிப்பூட்டல் நாடகங்கள் ஆர்.டி.எப். நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-100)




உதவும் இதயங்கள் நிறுவனம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விசுவமடு தேராவிலில் வசிக்கும் மார்க்கண்டு - நாகம்மா தம்பதியினருக்கு வாழ்வாதார உதவியாக மாதாந்தம் 5ஆயிரம் ரூபா உதவித்தொகையை வழங்கியுள்ளது.

தனிமையில் வாழும் இந்தக் குடும்பத்துக்கு உதவுமாறு மேற்படி கிராம மக்கள் உதவும் இதயங்கள் நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்த நிறுவனம் இந்த உதவியை வழங்கி உள்ளது. முதற்கட்டமாக மருத்துவ செலவுக்காக 15 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது. அத்துடன் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் 6 மாதங்களுக்குரிய தொகையாக 30 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் ச.சஜீவன் அவர்களுக்கான உதவியை வழங்குகிறார். (ஐ-10)

# ஆனந்த வாழ்வு தருவார் ஆஞ்சநேயர்

## ஆஞ்சநேயப் பெருமானின் ஜெயந்தி இன்றாகும்

தெய்வத் தமிழ்ச் சுடர்
● இராசையா ஸ்ரீதரன்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியின் திருவருளுக்குப் பாத்திரமான ஆஞ்சநேயரின் ஜெயந்தி தினம் இன்றாகும். எல்லாம் வல்ல ஸ்ரீ ராம பிரானுடைய பக்தரான இவர் வாயு தேவரின் புத்திரராவார்.

அஞ்சனை வயிற்றில் பிறந்த ஆஞ்சநேயர் சகல கலைகளிலும் வல்லவர். வேண்டும் பக்தர்களுக்கு வேண்டுவதை ஈந்தருளும் இந்த ஆஞ்சநேயரை வழிபட்டால் உலக வாழ்க்கையில் சர்வ காரியமும் சித்தியாகி நல்ல மங்கலகரமான சிறப்பு மிக்க ஆனந்தமான நல்வாழ்வு கிட்டும்.

பெருமாள் கோயில்களில் இவருக்குச் சிறப்பான ஆலயம் இருக்கும். எனினும் சில இடங்களில் தனியான ஆலயமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆஞ்சநேயரின் அருள் பவித்திரமான சித்திகளைத் தரவல்லது.

இவர் சிறுபராயத்திலே விளையாட்டாக சூரியனை ஒரு பழம் என்று கருதி வாயில் போட்டு விழுங்கினார் என்று சொல்லப்படுகிறது.

யார் யாரெல்லாம் தம்மிடம் வந்து குறைகளைச் சொல்லி வழிபடுகின்றார்களோ அவர்களுடைய குறையை நிவர்த்தி செய்து நிறைவைத் தந் தருளுவார். இவரது கிருபை பெற வேண்டுமாயின் துளசி, வெற்றிலை மாலை போட்டும் வடை மாலை சாத்தியும் வழிபடலாம். எல்லாம் வல்ல ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியின் திருவருள் வசத்தால் இராமாயணக் காவியத்திலே முக்கிய பாத்திரமாக விளங்கும் இவரே சீதாதேவியைக் கண்டுபிடிக்க ஆகாய மார்க்கமாக இலங்கைக்கு வந்து பல்வேறு அதிசய அற்புத லீலைகளைப் புரிந்தார் எனக் கூறப்படுகிறது.

சீதையைச் சிறைப்பிடித்த இராவணனுடன் இராமர் யுத்தம் புரிந்த வேளை அவரைத் தோளிலே சுமந்த வண்ணம் சண்டையிட்டார்.

இவருடைய அதீத அற்புத ஆற்றலால் இராமரின் தம்பி இலட்சுமணன் சண்டையிலே மூர்சையான பொழுது ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து அவரை உயிர்ப்பித்தார் என்று சொல்லப்படுகிறது. யுத்த களத்திலே இராவணனுக்கு வலி என்றால் என்ன என்பதை உணர்த்திய பெருமை இவருக்கே உரியது.

புக்தர்களின் வழிபாட்டுக்காக இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தில் மருதனார்மடத்திலும் கொழும்பில் தெஹிவளையிலும் மலையகத்தில் இறம்பொடையிலும் பிரசித்தமான கோயில்கள் இருக்கின்றன. பஞ்சமுக ஆஞ்சநேயரைத் தரிசித்து அவரருள் பெற்றால் ஆகாத காரியங்களும் ஆகு மென்பது ஆன்றோர் நம்பிக்கை.

இவருடைய ஜெயந்தி தினம் மார்கழி மாதத்து மூல நட்சத்திரமும் அமாவாசைத் திதியும் கூடிய நல்ல நாளாகும். ஆஞ்சநேயரை வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து வழிபாடியற்றினால் உடற்பலம், அறிவாற்றல், காரிய சித்தி, இசை ஞானம் கிடைக்கும்.

இவருக்கு பச்சை வெண்ணெய், தயிர்ச்சாதம், பயறு, கடலை என்பன பிரியம். உறைப்பான கறி, சோறு படைத்தால் நன்மை கிட்டும்.

ஆஞ்சநேயரின் அருள் கிடைப்பதற்கு நாம் பெருமாள் கோயில்களில் உள்ள சுவாமியை வணங்குல் நன்று. ஏனெனில் விஷ்ணு மூர்த்தியாகிய இராமர் திரு அவதாரஞ் செய்யும் போது அனுமானே பல விதத்திலும் துணை நின்றமையேயாகும்.

இன்றைய ஆஞ்சநேயர் ஜெயந்தி நன்னாளில் நாம் அனைவரும் அவரை வணங்கி எதிர்வரும் புதிய ஆண்டிலாவது நன்மைகள் பெருகித் துன்பங்கள் விலகி நல்வாழ்க்கை அமைய வேண்டும் என்று போற்றித்துதிக்கவேண்டும். உண்மையான பக்தியுடன் ஏற்றிப் போற்றி வணங்கினால் நிச்சயம் நல்வாழ்வு முறையாகக் கிட்டும்.

# கட்டாரில் போதைப்பொருள் விற்ற இலங்கையருக்கு 2 ஆண்டுகள் சிறை

## பொலிஸுக்கே வியாபாரம் செய்தாராம்

கட்டார் நாட்டில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதித்துள்ளது டோஹா குற்றவியல் நீதிமன்றம்.

மாறு வேடத்தில் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு ஆயிரத்து 500 கட்டார் ரியால்களுக்கு கஞ்சா போதைப் பொருளை விற்பனை செய்ய முயன்றபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் விற்பனை செய்த அந்த இலங்கை நபருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளதுடன், 20 லட்சம் ரியால் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.சந்தேக நபரிடம் இருந்த கஞ்சா போதைப் பொருள்மற்றும்பணம்என்பனஅரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

சிறைத் தண்டனைக் காலம் முடிவடைந்த பின்னர் அந்த நபரை நாடு கடத்துமாறும் டோஹா குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# நாட்டிலுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## சுகாதார அமைச்சுப் பணியாளர்களுடன் முப்படையினர், பொலிஸாரும் இணைவு

கொழும்பு, டிசெ.28

நாட்டில் டெங்கு நோயை ஒழிக்கும் நோக்குடன் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் உள்ள அனைத்துப்பாடசாலைகளிலும் இரண்டு நாள்களுக்கு இந்த டெங்குஒழிப்புநடவடிக்கைகள் மேற்கொள்ள சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

டெங்கு நுளம்புப் பெருக்கம் ஏற்படக் கூடிய பிரதேசங்களைக் கண்டறிந்து அவ்வாறான இடங்களைத் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் அதிகளவு நுளம்பு பிரச்சினை காணப்படுகின்றது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடுத்த தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பாடசாலைகளில் டெங்குஒழிப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முப்படையினர், பொலிஸார் மற்றும் சுகாதார அமைச்சின் பணியாளர்கள் உள்ளிட்ட 640 பேரைக் கொண்ட குழுவினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று ஆரம்பமாகியுள்ள இந்தச் செயற்பாடுகள் இன்றும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் டெங்கு நோயால் 78 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், 49 ஆயிரத்து 930 பேர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பட்டம் விடும் 'சீஷன்' ஆரம்பம் வானில் கண்ணைக் கவரும் காட்சி

## சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஆர்வம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.குடாநாட்டின் எல்லா இடங்களிலும் தற்போது பட்டம் விடும் 'சீஷன்' ஆரம்பமாகியுள்ளது.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டம் ஏற்றுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் படல், கொக்கன், பாம்பன், ஆள் பட்டம் எனப் பல வகைப்பட்ட பட்டங்களை வானில் ஏற்றி மகிழ்கின்றனர்.

சிலர் மின் விளக்குகளைப் பட்டங்களில் பொருத்தி ஏற்றிப் பறக்க விடுகின்றனர். இரவு வேளைகளில் இவை மிகவும் அழகாகக் காட்சி அளிக்கின்றன.

மேலும் சிலர் ஒரு பட்டத்துக்குப் பின்னால் மூன்று, நான்கு பட்டங்களைத் தொடுத்தும் ஏற்றி வருகின்றமையையும் காண முடிகின்றது.

தைப்பொங்கல் நெருங்கி வரும் இவ்வேளையில் கூடுதலான வண்ண வண்ணப் பட்டங்கள் வானில் பறக்கின்றமையை எதிர்பார்க்கலாம். (இ)

# அரச ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் விரைவில்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு புதிய தேசிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை கொண்டு வருவதற்கு பொது நிர்வாக அமைச்சர் தீர்மானித்து உள்ளார்.

இந்தியா,ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ளது போன்ற பலன் மிகுந்த புதிய ஏற்பாடுகள் இங்கு வகுக்கப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அதற்கான திட்டத்தை விடுத்துள்ளார் என்று அறியப்படுகிறது. அதற்கென புதிய வரவு- செலவுத் திட்டத்தில் நூறு கோடி ரூபா ஒதுக்கப்பட உள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தப் புதிய மாற்றம் குறித்து அரச உத்தியோகத்தர்களின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு விரைவில் மேற் கொள்ளப் படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 283 புதிய 'இராஜ தந்திர' கடவுச்சீட்டுகள் விநியோகம்

கொழும்பு, டிசெ.28

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் வழங்கப்பட்டுள்ள 283 புதிய இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு புதிய இராஜ தந்திரக் கடவுச்சீட்டுக்கள் விநியோகித்தமைக்கான பின்னணி தொடர்பிலேயே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

உயர்மட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாகத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயர்மட்ட அதிகாரிகள் விசாரணை

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் 4 லட்சத்து 23 ஆயிரத்து 66 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடவுச் சீட்டுக்கள் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 705 கடவுச் சீட்டுக்களும், ஏனைய நாடுகளுக்கு 2 லட்சத்து 69 ஆயிரத்து 647 கடவுச் சீட்டுக்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஒன்பது மாத காலப் பகுதியில் 283 புதிய இராஜ தந்திரக்கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன. குடிவரவுகுடியகல்வு திணைக்களத்தால் 54 ஆயிரத்து 761 கடவுச் சீட்டுக்களுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




பொன்.வேணு கிருஷ்ணா

**மக்கார்த்தியிச கூறுபாடுகள்**

டைம்ஸ் மற்றும் ஏனைய ஊடக நிறுவனங்களின் அறிவிப்புகள், 1950 களின் இழிவார்ந்த மக்கார்த்தியிச கூறுபாடுகள் அனைத்தையும் அன்றைய சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக பயன்படுத்தியதைப் போல் இன்றைய முதலாளித்துவ ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றன: அதாவது ''நயவஞ்சக ரஷ்யா'' என்று மிரட்சியூட்டும் விதத்தில் கண்டிப்பது, வெட்கமின்றி பொய்யுரைப்பது மற்றும் உள்நாட்டு போட்டியாளர்களை உளவாளிகள், தேசத் துரோகிகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் முகவர்கள் என்று தாக்குவது ஆகியவையாகும். (The declarations by the Times and other media outlets combine all of the noxious elements of 1950s McCarthyism, with capitalist Russia replacing the Soviet Union: hysterical denunciation of 'wily' Russia, shameless lying and attacks on domestic opponents as spies, traitors and agents of foreign governments.)

**இராணுவ-உளவுத்துறையின் ஒரு கன்னை ரஷ்யாவுடனான ஓர் ஆக்ரோஷமான மோதலில் இருந்து பின்வாங்குவதில்லை என்பதில் தீர்மானகரமாக உள்ளது**


அந்நாட்டுக்குள் கடுமையான மற்றும் சீற்றமான மோதல்கள் உள்ளன மற்றும் இராணுவ-உளவுத்துறையின் ஒரு கன்னை ரஷ்யாவுடனான ஓர் ஆக்ரோஷமான மோதலில் இருந்து பின்வாங்குவதில்லை என்பதில் தீர்மானகரமாக உள்ளது. இது சிரியாவில் சி.ஐ.ஏ. தலைமையிலான ஆட்சி மாற்ற நடவடிக்கை தோல்வியடைந்ததன் மீதான கோபத்துடன் இணைந்துள்ளது. ட்ரம்ப் அவரது மந்திரிசபையைத் தளபதிகளைக் கொண்டு நிரப்பி உள்ளார் என்பதுடன் பாரியளவில் போரைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டு வருகிறார் என்றாலும், ரஷ்யாவுடன் அதிக இணக்கமாக இருக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளார். (There are bitter and raging conflicts within the state, and a faction of the military-intelligence apparatus is determined that there be no retreat from an aggressive confrontation with Russia. This is connected to anger over the debacle of the CIA&led regime&change operation in Syria. Trump has packed his cabinet with generals and is planning a massive escalation of war, but he has also indicated a preference for greater accommodation with Russia.)

ஆளும் வர்க்கத்துக்குள் இந்த உட்பகை மோதலுடன் சேர்ந்து, அங்கே மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யாவுக்கு எதிராகக்கூட இரு இடங்களிலும் இன்னும் இராணுவ மோதலை ஆதரிப்பதற்கு அமெரிக்க மக்களை அரசியல் ரீதியில் நிர்ப்பந்திக்க வைக்க ஒரு மறைமுகமான முயற்சி நடந்து வருகிறது.

அமெரிக்கத் தேர்தலில் ரஷ்ய தலையீட்டைக் குற்றஞ்சாட்டும் பிரசார நடவடிக்கை, அதற்கு சமாந்தரமாக, ரஷ்யா ஆதரவுடன் சிரிய அரசு துருப்புகள் சிரிய நகரமான அலெப்போவை மீண்டும் கைப்பற்றுகையில் படுகொலைகளை நடத்தி வருகின்றன என்று அதே சம்பந்தப்பட்ட ஊடகங்கள் செய்திகளைப் பொழிந்து வருகின்றன.

**அலெப்போவை அழிப்பவர்கள்: அசாத், புட்டின், ஈரான்''**





''அலெப்போவை அழிப்பவர்கள்: அசாத், புட்டின், ஈரான்'' என்று தலைப்பிட்டு வியாழனன்று டைம்ஸில் வெளியான முதன்மை தலையங்கம் பின்வருமாறு அறிவிக்கிறது'' 2011 இல் அசாத்தை 'ஒதுக்க' அழைப்பு விடுத்த பின்னர், ஒபாமாவால் அதற்குப் பின்னர் அவ்வாறு நிகழ்த்த இயலவில்லை, மேலும் அவர் பதவியில் இனி ஒருபோதும் அவ்வாறு நிகழப் போவதும் இல்லை, குறைந்தபட்சம் அதற்கான விலையாவது அமெரிக்க மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். சிரியாவில் அமெரிக்க இராணுவத் தலையீட்டுக்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகள், முந்தைய பிரசார நடவடிக்கை அளவுக்கு 'ஒத்திசைவாக' இல்லை என்ற உண்மைக்காக, டைம்ஸ் இன் வியாழக்கிழமை முதல்பக்க தலைப்பு செய்தி புலம்புகிறது.



Aleppo's Destroyers: Assad, Putin, Iran

By THE EDITORIAL BOARD DEC. 14, 2016

Source: http://www.nytimes.com/2016/12/14/opinion/

CreditRoman Muradov

Watching the fall of the ancient syrian city of Aleppo has been excruciating. Civilians who survived weeks of intense shelling have reportedly been slaughtered by the forces of the Assad government as they have fled the battle zone, some shot in house to - house searches. Thousands more are trapped with no food, water or



shelter. This is a message from someone saying farewell and who could face death or arrest at any time, a medic wrote on a messaging service. The United Nations called the catastrophe a complete meltdown of humanity.

The Assad forces are close to retaking Aleppo, the last major city not in government hands. In 2011, President Bashar al&Assad ignored the demands of peaceful protesters and unleashed a terrifying war against his people. More than 400,000 Syrians have been killed while millions more have fled across regional borders and to Europe.


But Mr. Assad could never have prevailed without the support of President Vladimir Putin of Russia and, to a lesser extent, Iran. That is a truth that President&elect Donald Trump, a Putin apologist who is surrounding himself with top aides who are also Kremlin sympathizers, cannot ignore. During the presidential campaign, Mr. Trump praised Mr. Putin for being a better leader than President Obama. This would be a good time for him to persuade Mr. Putin to end the slaughter.

Mr. Putin's bloody actions & the bombing of civilian neighborhoods, the destruction of hospitals, the refusal to allow noncombatants to receive food, fuel and medical supplies & are all in violation of international law. At the United Nations Security Council on Tuesday, Samantha Power, the United States ambassador to the United Nations, said to Mr. Assad, Russia and Iran that they had put a 'noose' around Aleppo's civilians and: It should shame you. Instead, by all appearances, it is emboldening you.

At the start of the conflict, when hard&nosed diplomacy in the Security Council might have forced Mr. Assad to make political compromises and avert war, Russia used its veto to shield him from criticism and sanctions. By October 2015, when it looked like Mr. Assad was losing, Russia sent jets and troops and became an active combatant on the government's behalf against the rebels, including those trained and assisted by the United States and Arab nations. Hezbollah, backed by Iran with arms and money, has also been a vital asset for the Assad regime, reportedly deploying at least 5,000 fighters in Syria. The chaos has let the Islamic State establish a headquarters in Syria and become a major terrorist threat.

இந்த விஷமப் பிரசாரத்தில் சர்வதேச பத்திரிகையும் இணைந்துள்ளன. சிரியாவின் நெருக்கடிக்கு ஒபாமா ஓர் இராணுவத் தீர்வை அல்ல, ஓர் இராஜாங்க தீர்வைத் தேடினார். அது "அமெரிக்காவிலும் மற்றும் ஜேர்மனியிலும் இரண்டு இடங்களிலும் அவரைப் பிரபலமாக்கியது," என்று ஜேர்மனியின் Der Spiegel இல் வெளியான ஒரு துணை-தலையங்கம் கடுமையாகக் குறைகூறுகிறது, அக்கட்டுரை குறிப்பிடுகையில், அதுபோன்ற ''சுய-நியாயப்பாடு தவறானது'' என்பதை அது சேர்த்துக் கொள்கிறது.









(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



# தமிழ்த் தேசிய எழுச்சி





ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




09

## விடுதலைப் புலிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இளம்பிராயத்தில் மிகுந்த நுண்ணறிவும் விழிப்புணர்வும் கொண்டிருந்த பிரபாகரன், தனது மக்கள் வாழ்ந்த அடக்குமுறையான சூழ்நிலையையும் அவர்கள் அனுபவித்து வந்த ஆழமான துன்ப, துயரங்களையும் உணர்ந்து கொண்டார். இன ஒடுக்குமுறையின் கோரமான தன்மையையும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட மிருகத்தனமான அட்டூழியங்களையும் சிறுபிராயத்திலிருந்தே, பல வழிகளில் - தனது குடும்பத்தினர் நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கிராமத்து முதியவர்கள் - ஆகியோரிடமிருந்து அறிந்து கொண்டார். அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வதைகளையும், கொடுமைகளையும் கேட்டறிந்தபோது இளம் பிரபாகரனின் இதயத்தில் வெஞ்சினம் பொங்கியது. ஒடுக்கப்பட்ட தனது மக்கள் வாய்மூடி மௌனிகளாகத் தொடர்ந்தும் இக்கொடுமைகளை அனுபவிக்காது, அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடவேண்டுமென்று பிரபாகரன் எண்ணினார். மனிதர்கள் தமது விருப்புகள், அபிலாஷைகளுக்கு அமைவாகச் சுயாதீனமாக வாழும் உரிமைதான் சுதந்திரமென அவர் கருதினார். வெளி அழுத்தங்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறும் பொழுதுதான் உண்மையான சுதந்திரத்தை மனிதர்கள் சுகிக்க முடியும் என்றும் பிரபாகரன் நம்பினார். சுதந்திரம் என்ற இந்த உன்னதமான வாழ்வியல் விழுமியத்தை அடைவதற்கு, சில சூழ்நிலைகளில் பெரும் தியாகங்கள் புரிந்து, அர்ப்பணிப்புகள் செய்து போராடுவது அவசியம் என்றும் அவர் சிந்தித்தார். இளம் புரட்சிவாதியான பிரபாகரனுக்கு சுதந்திரம் என்பது இதய பாசமாயிற்று. சுதந்திரத்துக்காகப் போராடுவது என்பது தணியாத தாகமாயிற்று. பள்ளிப் படிப்பு பிரபாகரனை வெகுவாகக் கவரவில்லை. மானிட சுதந்திரம் பற்றியும், சுதந்திரத்தை அடைய மனிதர்கள் தொடுத்த போராட்ட வரலாறு பற்றியும் நிறையக் கற்றறிய வேண்டும் என்பதே இளம் பிரபாகரனின் வேட்கையாக இருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் கொந்தளிப்பான வரலாறு பிரபாகரனை வெகுவாகக் கவர்ந்தது. அக்காலத் தமிழ் அரசியல்வாதிகள் மகாத்மா காந்தியை வழிபட்டனர். காந்திஜியின் அஹிம்சைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சாத்வீக போராட்ட முறையைத் தழுவினார். பிரித்தானிய குடியேற்ற ஆட்சிக்கு எதிராக வன்முறைப் போர் தொடுத்த சுபாஷ் சந்திரபோஸ், பகத் சிங் ஆகிய கிளர்ச்சியாளர்களே பிரபாகரனை வெகுவாகக் கவர்ந்தனர். ஆங்கில ஆட்சியாளருக்கு எதிராகத் தலைமறைவுத் தாக்குதல்களை நடத்திவந்த சீக்கிய இளம் புரட்சிவாதியான பகத் சிங்கை விட சுபாஷின் விடுதலைப் போராட்ட வரலாறே பிரபாகரனை வெகுவாக ஈர்த்தது. பிரித்தானியருக்கு எதிராக இந்திய தேசிய விடுதலையை வென்றெடுக்க ஆயுதப் போராட்டமே உகந்த வழியெனக் கருதி, ஒரு தேசிய விடுதலை இராணுவத்தைக் கட்டியெழுப்பிய சுபாஷின் துணிச்சலைப் பெரிதும் மதித்த இளம் பிரபாகரன், அந்த இந்திய சுதந்திர வீரனின் வாழ்க்கை பற்றியும் சிந்தனை பற்றியும் நிறைய வாசித்தார். சுபாஸின் பிரசித்தி பெற்ற உரைகள் இவருக்கு ஊக்கத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்தன. மகாத்மா காந்தியின் சிந்தனைகளையும் பிரபாகரன் படிக்கத் தவறவில்லை. காந்தியின் அஹிம்சைத் தத்துவத்தின் அடிநாதமாக விளங்கிய ஆன்மீக அறநெறிப் பண்புகளுக்கு அவர் மதிப்பளித்த போதும், அவை தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பொருத்தமாக அமையுமா என்பதில் பிரபாகரனுக்கு ஆழமான ஐயப்பாடு இருந்தது. சிங்கள இனவாத அரசின் ஈவிரக்கமற்ற அடக்குமுறைப் போக்கு அஹிம்சைவாத அறிநெறிப் பண்புகளுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை என்பதை தமிழரின் அரசியல் வரலாற்றிலிருந்து பிரபாகரன் ஏற்கனவே அறிந்து கொண்டார். இந்தியக் காவியமான மகாபாரதம் இளம் புரட்சிவாதியான பிரபாகரனை மிகவும் கவர்ந்தது. மகாபாரதத்தை தீய சக்திகளுக்கு எதிரான ஒரு தர்ம யுத்தமாகக் கண்ட பிரபாகரன், ஈற்றில் 'தர்மமும் சத்தியமுமே வெற்றி கொள்ளும்' என்ற மெய்யுண்மையை இக் காவியம் வாயிலாகத் தெரிந்து கொண்டார். வரலாறு படைத்த தமிழ்ப் பேரரசுகள் பற்றியும், தமிழ்ச் சக்கரவர்த்திகளின் வீரம் செறிந்த வரலாறுகள், படையெடுப்புக்கள், போர்கள் பற்றியும் பிரபாகரன் நிறையவும் வாசித்தார். தமிழரின் பெருமை மிக்க வரலாறுகள் அவருக்குப் புத்துணர்வை அளித்தன.

அந்நிய குடியேற்ற ஆட்சிக்கு எதிராகத் துணிச்சலுடன் ஆயுத வன்முறைப்போரில் குதித்த இந்திய விடுதலை வீரர்களது வாழ்வும் புரட்சிகர சிந்தனையும் இளம் பிரபாகரனை ஆழமாகப் பாதித்தன. பண்டைத் தமிழ் இனத்தின் பழம்பெரும் நாகரிகமும், வீரம் செறிந்த வரலாறும் அவருக்குப் பெருமிதம் அளித்தன. இளம் வயதிலேயே இவற்றையெல்லாம் படித்தறிந்த பிரபாகரன், ஒடுக்கப்பட்டு வாழும் தனது மக்களின் விடுதலைக்காகத் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துப் போராட உறுதிபூண்டார். கொடூரமான ஓர் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் போர்தொடுக்கும் ஒரு புரட்சிவாதி எதிர்கொள்ளவேண்டிய பேராபத்துக்கள் பற்றிப் பிரபாகரன் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. ஆயினும், தேசவிடுதலை என்ற பொதுவான தர்மத்துக்காகச் சாவைத் தழுவவும் அவர் தயாராக இருந்தார்.

பதினாறு வயதிலேயே அரசினால் தேடப்பட்டு, தப்பி ஓடித் திரியும் தலைமறைவு வாழ்வை வரித்துக் கொள்ள வேண்டிய அவலநிலை பிரபாகரனுக்கு ஏற்பட்டது. அதுவும், இரகசிய காவல்துறையினரின் கண்துஞ்சாக் கண்காணிப்பு இவரது சொந்தக் கிராமம் மீது திருப்பப்பட்டு,நள்ளிரவுகளில் இவரது வீடு சுற்றிவளைப்புகளுக்கு இலக்காகியதைத் தொடர்ந்து, தலைமறைவு வாழ்வும் நெருக்கடியானதாக மாறியது. கைது செய்யப்படுவதைத் தடுக்க குடும்பத்தில் இருந்து பிரிந்து தனித்து வாழ வேண்டிய




நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. தங்குவதற்கு வதிவிடம் இன்றி, நாளுக்கு நாள் அங்குமிங்குமாக அலைந்து திரிவதும்,பகலில் பதுங்கி ஒளிந்திருந்து இரவில் மட்டும் நடமாடுவதுமான ஒரு நாடோடி வாழ்க்கை. நிம்மதியாகத் தூங்குவதற்கும் வாய்ப்புமில்லை, வழியுமில்லை. இந்துக் கோவிலில் உள்ள மடங்கள், தேர்கள், கூரைகள், அநாதரவாக விடப்பட்ட பாழடைந்த வீடுகள், காய்கறித் தோட்டங்கள் - இப்படியாக அந்தந்த வேளைக்கு கிட்டும் இடங்களில், அதுவும் சில மணி நேரம் மட்டும் தூங்குவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்று என்னிடம் ஒரு தடவை தனது நாடோடி வாழ்க்கை பற்றி விவரிக்கும் போது பிரபாகரன் சொன்னார்.

பசிவதை அவரை சதா உறுத்தியது. சில சமயங்களில், முழு நாளாகப் பட்டினி கிடந்து துன்புற வேண்டி இருந்தது. பசி தாங்க முடியாமல், சில இரவுகளில், காய்கறித் தோட்டங்களுக்குள் நுழைந்து மரவள்ளிச் செடியைப் பிடுங்கி, கிழங்குகளைத் தோண்டி எடுத்து, பச்சையாக பச்சை மிளகாயுடன் சேர்த்து உண்ணும் போது அமிர்தமாக இருக்கும் என அவர் என்னிடம் சொன்னார். இளம் போராளியாக விடுதலைப் பாதையில் காலடி வைத்த காலத்தில் இருந்தே பசியின் உபாதைக்குப் பழகிக் கொண்டார் பிரபாகரன். தணியாத இலட்சியப் பசி, பிரபாகரனின் வயிற்றுப் பசிக்குத் தீனி போட்டது. இளம் பராயத்தில் அனுபவித்த இடர்கள், துன்பங்கள் அவர் எதிர்கொண்ட சோதனைகள், சவால்கள், ஆபத்துக்கள் எல்லாமே அவரது இலட்சிய உறுதிக்கு உரமூட்டின.

தனி மனிதனாக நின்று தலைமறைவு வாழ்க்கையை வரித்துக் கொண்டு பிரமாண்டமான அரச அடக்குமுறை யந்திரத்தை எதிர்த்து நின்ற இளம் புரட்சிவாதியான பிரபாகரனுக்கு செம்மையாகத் திட்டமிடப்படாது தனித்தனிச் சம்பவங்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து வந்த அரசியல் வன்முறைச் செயல்கள் அர்த்தமற்றவையாகப் புலப்பட்டன. இவை, தமிழரின் அரசியல் போராட்டத்தை முன்நகர்த்தப் போவதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டார். இவரோடு சம காலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் காவல் துறையினரால் கைதாகி சிறையில் வாடிக் கொண்டிருந்தனர். தனி நபர்களால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வன்முறை நடவடிக்கைகளும் செம்மையர்க ஒழுங்கமைக்கப்படாமல் தேர்ச்சி இன்றிக் கையாளப்பட்டமையால் அவை பிசுபிசுத்துப் போனமையையும் இவர் கண்டறிந்து கொண்டார். தீவிரவாத இளைஞரின் அரசியல் வன்முறைப் போராட்ட நடவடிக்கைகளை ஆழமாகப் பார்த்த போது, அவை ஏற்படுத்திய எதிர்மறையான அரசியல் விளைவுகளையும், அதனால் தீவிரப்படுத்தப்பட்ட அரச ஒடுக்குமுறையின் பாதிப்புக்களையும் அவர் உணர்ந்து கொண்டார். இவற்றிலிருந்து பிரபாகரனுக்கு ஓர் உண்மை தெட்டத்தெளிவாகப் புரிந்தது. ஒழுங்கமைவான ஆயுதப் போராட்ட வழிமுறை வாயிலாக, தேசிய விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பு அவசியமானதும் வரலாற்றுத் தேவையானதும் என்பதை அவர் புரிந்து கொண்டார். ஆயுதப் போராட்டத்துக்கு அத்தியாவசியமான ஒரு தலைமை வழிகாட்டல், ஒழுங்கமைவான கட்டமைப்பு ஆகியவற்றை மாணவர் பேரவைத் தலைவர்கள் வழங்குவார்கள் என்று பிரபாகரன் நம்பியிருந்தார். ஆனால், இப்புரட்சிகரப் பணியை மேற்கொள்வதில் இந்தத் தலைவர்கள் ஈடுபாடு காட்டாதமையால் இவருடைய எதிர்பார்ப்பு தவிடுபொடியாயிற்று. பேரவைத் தலைவர்கள் கைதாகிச் சிறைப்படுத்தப்பட, பேரவையும் செயலிழந்து செத்துப்போனது. இதனால் உருவாகிய அரசியல் வெற்றிடத்தையும் அதேவேளை தீவிரமாகிச் செல்லும் அரச ஒடுக்குமுறைச் சூழலையும் எதிர்கொள்வதற்கு, புரட்சிகர அமைப்பு ஒன்றை நிறுவ வேண்டிய அவசியத் தேவை நிலவியது. இங்கே ஒரு முக்கிய தீர்மானத்துக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் பிரபாகரனுக்கு ஏற்பட்டது. தனது தலைமையின் கீழ் ஆயுதம் தரித்த அமைப்பு ஒன்றை நிறுவுவதென, இறுதியில் அவர் தீர்மானித்தார். இத்தகைய வரலாற்றுச் சூழலிலேயே 1972 இல் தமிழ்ப் புலிகள் இயக்கம் வரலாற்று ரீதியாகப் பிறப்பு எடுத்தது. இதன் ஆரம்பத்தின் போது புதிய தமிழ்ப் புலிகள் என்று அந்த அமைப்பு தன்னை அழைத்துக் கொண்டது. பின்னர், 1976 மே 5 அன்று, அதன் உறுப்பினர்கள் தம் அமைப்பின் பெயரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மீளப் பெயர் சூட்டிக்கொண்டார்கள்.

(தொடரும்...)





புத்தாக்க அரங்க இயக்கத்தின் 'சுத்தம்' என்னும் தொனிப் பொருளிலான சுகாதார விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை சாவகச்சேரியில் அண்மையில் ஆற்றுகை செய்யப்பட்டது. வேல்ட்விஷன் நிறுவன அனுசரணையில் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் சாவகச்சேரி பிரதேசத்தில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஆற்றுகை செய்யப்பட்டது. (ஐ-54)

# எம்.பிக்களின் வாகனங்களில் இனி பெயருக்குப் பதில் புகைப்படம்

கொழும்பு, டிசெ.28

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களில் அவர்களின் புகைப்படங்கள் ஒட்டப்பட உள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

வாகனத்தில் பயணிப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாறு வாகனங்களில் அவர்களின் புகைப்படங்கள் ஒட்டப்பட உள்ளன.

பெரிய வர்ணப் புகைப்படம் ஒன்று வாகனத்தின் முன் பக்கத்தின் ஓர் மூலையில் ஒட்டப்பட உள்ளது.

இரவு நேரங்களிலும் தெளிவாக அடையாளம் காணக் கூடிய வகையில் 'ஆசூலின்' கடதாசியில் இந்தப் புகைப்படம் அச்சிடப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவின் யோசனைக்கு அமைய இந்தப் புகைப்படங்கள் வாகனங்களில் ஒட்டப்பட உள்ளன.

இதேவேளை, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இரண்டு புகைப்படங்கள் வழங்கப்பட உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வகைப் புகைப்படம் ஒன்றுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபா அறவீடு செய்யப்படவுள்ளது.

அடையாளத்தை உறுதி செய்யும் புகைப்படத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்திலிருந்து ஆயிரம் ரூபா அறவீடு செய்யப்படவுள்ளது.

இதுவரையில் சுமார் 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த புகைப்படத்தைப் பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வித தடையும் இன்றி, சுய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வகையில் வாகனத்தில் பயணம் செய்ய இந்தப் புகைப்பட முறைமை அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றச் சுற்று வட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற போராட்டமொன்றின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்குப் பாதுகாப்பு தரப்பினர் இடையூறு ஏற்படுத்தினர் என்றும், தங்களது சிறப்புரிமை மீறப்பட்டதாகவும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இவ்வாறான நிலைமைகள் மீளவும் ஏற்படாமல் இருப்பதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தினசரி ராசி பலன் 28.12.2016

சுபநேரம் : காலை : 9.15 – 10.15
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 12.00 – 1.30
குளிகன் : 10.30 – 12.00
எமகண்டம் : 7.30 – 9.00

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** அமைதி - அமைதி நிறைந்து மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி காணும் நன்னாள்.

**ரிஷபம்:** சோர்வு இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சல்களாலும், மன உளைச்சல்களாலும் சோர்வு உண்டாகும் நன்னாள்.
சந்திராஷ்டமம் : கார்த்திகை 2,3,4ஆம் பாதங்கள், ரோகிணி

**மிதுனம்:** வரவு - இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நன்னாள்.

**கடகம்:** தாமதம் எண்ணிய எண்ணங்கள் யாவும் தாமதமாகவே நிறைவேறும் நாள்.

**சிம்மம்:** நட்பு - நண்பர்களின் அரவணைப்பு கிடைத்து நலம் நல்கும் நன்னாள்.

**கன்னி:** தடங்கல் - உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு காரியத்தில் தடங்கல் ஏற்படும்.

**துலாம்:** நஷ்டம் - அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவைக் குறைக்கும்.

**விருச்சிகம்:** நற்சொல் - எண்ணங்களும், செயல்களும், சொல்லும் சொற்கள் யாவும் வெற்றியையே தரும் நன்னாள்.

**தனுசு:** மகிழ்ச்சி - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நன்னாள்.

**மகரம்:** சிக்கல் - சிதறிய சிந்தனைகளாலும், அலட்சியங்களாலும் அவதிப்படும் நாள்.

**கும்பம்:** எதிர்ப்பு - எதிர்ப்புக்கள் எதிர்பாராமல் வாசல் கதவைத் தட்டும்.

**மீனம்:** மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்றுக் குறைவாக இருக்கும்.

# 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## பொதுப்பலன்


இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண் சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்ட பலர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை பெற்று மகிழ்வர்.

குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக்குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயல்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3–ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, பெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்து பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.

## எண் 2


- 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக R, K, B-ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண் 2ஆக அமைந்தவர்களுக்கும் வரும் ஆண்டு, அடுத்தவரிடம் எச்சரிக்கையாகப் பேசுதல், கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.
- தங்களின் கடின முயற்சிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். ஆனாலும், தொடர் முயற்சி அவசியம்.
- மங்கல காரியங்களில் சற்று இழுபறி இருந்தாலும் முடிவில் சில மாற்றங்கள் மூலம் நினைத்தபடி நடக்கும்.
- மனத்திடம் அவசியம். பெரியவர்களின் வார்த்தைகளை மதிப்பது நலம். கட்டுப்பாடுடன் கூடிய உணவு அவசியம். அகால நேரங்களில் உணவு உண்பதை தவிர்க்கவும்.
- தொழிலாளர் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். இருப்பினும் தங்களின் இனிய வார்த்தைக்கு கட்டுப்படுவர். புதிய ஒப்பந்தங்களில் உஷாராகுங்கள் தொழில் அதிபர்களே.
- கற்பனைகளை தாறுமாறாக செய்வதால் கடன்கள் அதிகரிக்கலாம். அரசாங்கத் திட்டங்களை வியாபாரிகள் மதிப்பது நல்லது.
- அதிகாரிகளிடம் அதிக நெருக்கம் வேண்டாம். உரிய பணிகளை சரியாகச் செய்து பெயர் பெறுவதே சிறப்பாகும் பணியாளர்களுக்கு.
- தங்களுடைய 'டைமண்ட்' குரல் வெளிப்பாடு செய்து எக்கு தப்பாக மாட்டிக்கொள்ள நேரிடும் அரசியல்வாதிகளே உஷார்.
- வெளிநாட்டுக்குச் செல்லும் கலைஞர்கள் ஒப்பந்தம் எதுவோ அதை மீறாமல் செயற்படவும். இல்லையேல் நாடு திரும்புவதில் சிரமங்களை ஏற்படுத்துவர் சிலர்.
- உழவு கருவிகள் பழுது, தண்ணீர் பற்றாக்குறை, கால்நடைகளால் செலவு என விவசாயிகள் புலம்ப நேரிடும்.
- பெண்களின் புகழுக்கு களங்கம் வரலாம். கணவருடன் இணக்கமான போக்கே மகிழ்வுக்கு வழிகாட்டும்.
- மறதி அதிகரிக்கும். கவனக்குறைவு, ஆசிரியர்களிடம் நற்பெயர் குறையும் நிலை ஏற்படலாம். மாணவர்களே உஷார்.



*கலாநிதி ஜே.என்.எஸ்.செல்வன்* Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர்.நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# மக்களின் அடிப்படை நிலைகளையே யுத்தம் ஆட்டம் காண வைத்துள்ளது

## காரைநகர் நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் உரை



யாழ்ப்பாணம், டிசெ.28
யுத்தம் பல குடும்பங்களின் அடைப்படை நிலைகளையே ஆட்டம் காணச் செய்துள்ளது என்று வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 22 பயனாளிகளுக்கு சிறிய ரக மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுவாகவே மீன்பிடித்தொழில், இறால் கூடு கட்டுதல், நண்டுக் கூடு கட்டுதல் போன்ற தொழில்கள் ஆண்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

நாட்டில்ஏற்பட்ட கொடிய யுத்தம், அடைப்படை நிலைகளையே ஆட்டம் காணச்செய்துள்ளது. பல குடும்பங்கள், குடும்ப தலைவர்களை இழந்து, பிள்ளைகளை இழந்து நிர்க்கதியான நிலையில் உள்ளன. பெண்கள் தமது குடும்பத்துக்குத் தலைமை தாங்கி வாழ்வாதாரத் தேடல்களை மேற்கொள்ளவேண்டியவர்களாக வலிந்து ஈடுபட வேண்டியுள்ளது.


பெண்கள் பொதுவாகவே மென்மையானவர்கள். அவர்களின் உடல் வாகும் மென்மையான தொழில்களுக்கு ஏற்ற உடல் கட்டமைப்பையே கொண்டது. இவ்வாறான பெண்கள் காலத்தின் கட்டாயத்தால் தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற முனைப்பில் தோட்ட வேலைகளுக்குச் செல்கிறார்கள். மீன்பிடித் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். வெயிலில் வாடி, மழையில் நனைந்து, பனியில் ஈடுபட்டு எல்லாத் தட்ப வெப்பங்களுக்கும் ஈடு கொடுக்கக் கூடிய தொழில்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இங்கு அவர்கள் செய்யும் தொழில்களைச் சற்று இலகுவாக்கும் நோக்கிலேயே இந்தச் சிறியரக மிதவைகளை காரைநகர், ஊரிக்காடு மற்றும் அராலித்துறைப் பகுதிகளில் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபா மற்றும் 74 ஆயிரம் ரூபா பெறுமதிகளில் வள்ளங்களைக் கொள்வனவு செய்து வழங்குகின்றோம்.

மகளிர்விவகார அமைச்சு மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோரின் சிபார்சின் பெயரில் காரைநகர் பிரதேசசபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு இந்தப் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது. வழங்கப்படும் உபகரணங்களைப் பயனாளிகள் உரியவாறு பாதுகாத்துப் பயனடைய வேண்டும்.

இன்று வழங்கப்படும் இந்தச் சிறியரக வள்ளங்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 22 பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு அவர்களின் வீட்டில் உலை ஏறுவதற்கு உதவும். இந்த வள்ளங்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் அவற்றின் உதவியுடன் தங்கள் குடும்ப வருமானங்களைப் பெருக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.- என்றார். (ஐ)



மூதறிஞர் சிற்பி சரவணபவனின் நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும் அண்மையில் நீர்வேலியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்றன. நிகழ்வில் அவரது பாரியார் அஞ்சலி செலுத்துவதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (ஐ)

## மது போதையில் வாகனம் செலுத்துவோருக்கு ஆப்பு!

கொழும்பு, டிசெ.28
மது போதையில் வாகனம் செலுத்துவோரைக் கண்டறிவதற்குப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கை ஜனவரி 6 ஆம் திகதி வரை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நத்தார் தினத்தை முன்னிட்டு இந்தச் சோதனை நடவடிக்கைகள் கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மதுபோதையில் வாகனம் செலுத்துவதால் அதிக விபத்துகள் இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பண்டிகை காலம் என்பதால் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கலாம் என் பதைக் கருத்தில் கொண்டே விசேட சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி சோதனை நடவடிக்கை ஜனவரி மாதம் 6 ஆம் திகதி வரை தொடரும் என்று பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்துப் பிரிவு பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.யு.சந்திரதாஸ தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிவதற்கான இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் தொடரப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## ‘காந்தீயம்’ வெளிவந்துள்ளது


யாழ்ப்பாணம், டிசெ.28
அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தின் வெளியீடான ‘காந்தீயம்’ பத்திரிகையின் டிசெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் சங்கத்தின் முதலாவது தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் பற்றிய கட்டுரை, நெல்சன் மண்டேலா பற்றிய கட்டுரை, பின்லாந்து கல்விமுறை தொடர்பான கட்டுரை, எழில் பூக்கள் நூல் விமர்சனம், மணிமன்றன் எழுதிய ‘எழுச்சியின் திருவுருவம் காந்தி’ என்ற தலைப்பிலான கவிதையும் பிற செய்திகளும் அடங்கியுள்ளன. (இ)

### வடக்கில் வீதிகளைத் திருத்தியமைக்க

# 2017 ஆம் ஆண்டு திட்டத்துக்கு 200 மில்.ரூபா மட்டும் ஒதுக்கீடு

## கொஞ்சமும் போதாது என்று டெனீஸ்வரன் விசனம்



யாழ்ப்பாணம், டிசெ.28
வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 2 ஆயிரத்து 120 கிலோ மீற்றர் நீளமான இ, ஈ தரங்களிலான வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டன.

அதில் 375 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன. 708 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மேலும் ஆயிரத்து 37 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ள நிலையில் அவற்றைப் புனரமைப்புச் செய்வதற்குச் சுமார் 30 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவையாக உள்ளது.

ஆனால், மாகாண வீதி அபிவிருத்தித்திணைக்களத்துக்கு 2017 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 200 மில்லியன் ரூபா மட்டுமே. இந்த நிதி கொஞ்சமும் போதாது.

வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் இவ்வாறு கூறியுள்ளார்.

வடமாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில், வீதி அபிவிருத்தி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 2 ஆயிரத்து 120 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டது. அவற்றில் சுமார் 375 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் இந்த வருடம் (2016) புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 708 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் ‘காப்பெற்’ வீதிகளாகவும், கொங்கிறீட் வீதிகளாகவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவை ‘ஐறோட்’ திட்டம் ஊடாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேலும் மீதமாக சுமார் ஆயிரத்து 37 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச்செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. அதைப் புனரமைப்புச் செய்ய சுமார் 30 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவையாக உள்ளது.

ஆனால், 2017ஆம் ஆண்டுக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வெறும் 200 மில்லியன் ரூபா மட்டுமே. இந்த நிதி கொஞ்சம் கூட போதுமானது அல்ல.- என்றார். (ஐ)

## பெப். 15 இற்கு முன் இல்லப் போட்டிகளை நிறைவு செய்க!

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னரும், மாகாண ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளை ஜூன் 22 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்க வேண்டுமென்றும் இது தொடர்பாகக் கல்வி அமைச்சுவெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து 15 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கலைஞானி நினைவு பிரார்த்தனை

கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 15ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று புதன் கிழமை சுதுமலை சிவகுருநாத பீடத்தில் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)

# தமிழக முதலமைச்சராக சசிகலா பதவியேற்கக் கூடிய வாய்ப்பு

## அ.தி.மு.கழக வட்டாரங்களில் நம்பிக்கை



சென்னை, டிசெ.28

தேர்தலில் போட்டியிடாமலே ஜனவரி 15 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிக்குள் வி.கே.சசிகலா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளார் என அ.தி.மு.கவின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும் எதிர்பார்ப்புக்கு இடையில் அ.தி.மு.க. பொதுக்குழு நாளை 29 ஆம் திகதி சென்னையில் கூடுகிறது.

இந்தப் பொதுக்குழுவில் சசிகலா அ.தி.மு.க. பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்படுவார் என்பது உறுதியாகி விட்டது.

இதனால், பொதுக் குழுவை சிறு சலசலப்புகூட இல்லாமல் வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்கான அனைத்து வேலைகளும் சசிகலா தரப்பிலிருந்து கவனமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது அவருக்கு ஜோதிடம் கணித்துக் கொடுத்த ஜோதிடர் குழுவின் ஆலோசனைப்படி அரசியலின் அடுத்தடுத்த நகர்வுகளுக்கும் சசிகலா தயாராகி வருகிறார்.

இது குறித்து அ.தி.மு.க.வின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:-

நாளை 29 ஆம் திகதி கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்படும் சசிகலா, புத்தாண்டில் முறைப்படி பொறுப்புகளை ஏற்றுக் கொள்கிறார்.

அநேகமாக ஜனவரி முதல் வாரத்தில் எளிய முறையில் அவர் கட்சியின் பொதுச்செயலாளராகப் பதவி ஏற்றுக்கொள்வார்.

இதையடுத்து, தை பிறந்ததும் சசிகலா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான வேலைகள் முடுக்கி விடப்படும்.

இதற்கேற்ற வகையில் அமைச்சர்கள், கட்சியின் நிர்வாகிகள் சசிகலா முதல்வர் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வெளிப்படையாகக் கோரிக்கை வைப்பார்கள். அதை ஏற்று, தை மாதத்தில் சசிகலா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்பார். அநேகமாக ஜனவரி 15 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிக்குள் அவர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்பார்.

தற்போது ஆர்.கே.நகர் தொகுதி வெற்றிடமாக இருப்பதால் அந்தத் தொகுதியில் சசிகலா போட்டியிடுவார் என்று பரவலான தகவல் உள்ளது.

ஆனால், சென்னையில் போட்டியிடுவதை விட தென் தமிழகத்தில் போட்டியிடுவதுதான் பாதுகாப்பாக இருக்கும் என்று உளவுத் துறை தகவல் தந்துள்ளது.

இதனால், ஆர்.கே.நகர் தொகுதியை இரண்டாவது தேர்வாக சசிகலா வைத்திருக்கிறார் .

அதற்குப் பதிலாக ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, மதுரை மேற்கு இந்த மூன்று தொகுதிகளில் ஏதாவது ஒன்றில் சசிகலாவை நிறுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு வேட்பாளராக இடம் கொடுக்கப்பட்டது. இதில் பெரும்பாலானவர்கள் சசிகலாவால் சிபாரிசு செய்யப்பட்டவர்களாவர். அவர்களில் இரண்டு பேர் தற்போது அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் பிரமலைக் கள்ளர் சமூகத்தினர் சசிகலாவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அவருக்காகப் பரிசீலனையில் உள்ள இந்த மூன்று தொகுதிகளிலும் கணிசமாக இருப்பது இந்தச் சமூகம்தான். எனவே, இதில் ஏதாவதொரு தொகுதியில் சசிகலா போட்டியிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

சசிகலா தலைமைப் பொறுப்புக்கு வருவது பெண்கள் மத்தியில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த எதிர்ப்பை வீழ்த்தி, பெண்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காக, முதல்வர் பொறுப்பு ஏற்றுக் கொண்டதுமே மதுவிலக்கை அமுல்படுத்தும் முக்கிய ஆவணத்தில் சசிகலா கையெழுத்திடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஜெயலலிதாவின் இடத்தை நிரப்ப பா.ஜ.கவால் மட்டுமே முடியும்!

### தமிழிசை சவுந்தரராஜன் கூறுகிறார்



கோவை, டிசெ.28

தமிழகத்தில் ஜெயலலிதாவால் ஏற்பட்ட வெற்றிடத்தை பாரதிய ஜனதாவால் மட்டுமே நிரப்ப முடியும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கோவை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இணையான தலைவர்கள் அ.தி.மு.கவிலும், தமிழகத்திலும் எவரும் இல்லை.

எனவே, ஜெயலலிதாவால் ஏற்பட்ட வெற்றிடத்தை பாரதிய ஜனதாவால் மட்டுமே நிரப்ப முடியும் என்று தெரிவித்துள்ளார்.

---

## ஜெயலலிதாவின் மரணம் குறித்து ‘கமரா’க்களில் பதிவான காட்சிகளின் அடிப்படையில் விசாரணை தேவை

### அவரது தோழியான கீதா கோரிக்கை

டில்லி, டிசெ.28

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் கண்காணிப்புக் ‘கமரா’வில் பதிவாகியுள்ள காட்சிகளை அடிப்படையாகக் கொண்ட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் தோழியான கீதா சென்னை எழும்பூர் பெருநகர தலைமை குற்றவியல் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த மனுவிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதிக்குக்கு ஒத்திவைக்கப்பட்டது.



ஜெயலலிதாவின் தோழியான கீதா சென்னை எழும்பூர் பெருநகர தலைமை குற்றவியல் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஜெயலலிதாவின் மரணத்தை சந்தேக மரணமாக பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்த வேண்டும்.

போயஸ் தோட்டம், அப்பலோ மருத்துவமனை ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ள காட்சிகளைப் பத்திரப்படுத்தி வைக்கவும் உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## ஜெயலலிதா இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா?

### ராமமோகன் ராவ் பரபரப்பு பேட்டி

கோவை, டிசெ.28

ஜெயலலிதா இருந்திருந்தால் வருமான வரித்துறையினர் தலைமைச் செயலக அலுவலகத்துக்குள் நுழைய முடியுமா? என பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைமைச் செயலாளர் ராமமோகன் ராவ் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் ராமமோகன் ராவ் வீடு, அலுவலகம் மற்றும் அவரது மகன் விவேக், உறவினர்கள் வீடுகளில் வருமான வரித்துறையினர் நடத்திய அதிரடிச் சோதனையில் பல லட்சம் மதிப்பிலான பணம், தங்கம் மற்றும் சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து ராமமோகன் ராவை தமிழக அரசு பணிநீக்கம் செய்தது.



இந்நிலையில், ராமமோகன் ராவ் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

வருமான வரித்துறை சோதனை மூலம் தலைமைச்செயலகத்தைக் காப்பாற்ற அரசு தவறிவிட்டது. இந்தச் சோதனை அரசியல் சாசனத்தின் மீதான தாக்குதலாகும்.

ஜெயலலிதா இருந்தால் தலைமைச் செயலகத்தில் வருமான வரித்துறையினர் நுழைய முடியுமா? துணை இராணுவப்படையினர் துப்பாக்கி முனையில் நுழைந்து எனது வீட்டைச் சோதனை நடத்தினர். இதனால், எனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று கூறியுள்ளார்.

---

## மக்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்க மோடி தயாராக வேண்டும்

### லல்லுபிரசாத் கூறுகிறார்



பட்னா, டிசெ.28

ரூபா தாள் பிரச்சினை தொடர்பாக மக்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்க மோடி தயாராக வேண்டும் என்று ராஷ்ட்ரீய ஜனதாதளம் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் கூறியுள்ளார்.

ரூபா தாள் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசைக் கண்டித்து பீகாரில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் பெரிய அளவில் போராட்டத்தை நடத்த உள்ளது. இதற்காக மக்களின் ஆதரவைத் திரட்டும் வகையில் ரத யாத்திரை நிகழ்ச்சி தொடங்கப்பட்டுள்ளது.

பட்னாவில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியை ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் லல்லுபிரசாத் யாதவ் தொடங்கி வைத்து உரையாற்றியுள்ளார். அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா வந்து சேர்ந்தார் ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ

## பியர்ல் துறைமுகத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவார்

ஹோனோலுலு, டிசெ.28

ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே அமெரிக்காவின்ஹவாய்க்குபயணம் மேற்கொண்டுள்ளார். அவர் 1941 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்காவின் பியர்ல் துறைமுக தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளார்.

1941 ஆம் ஆண்டு டிசெம்பர் 7 ஆம் நாள் அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் உள்ள பியர்ல் துறைமுகத்தின் மீது ஜப்பான் நாட்டு போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தது. இதில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் காயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலில் அமெரிக்காவுக்கு சொந்தமான எட்டு போர்க் கப்பல்கள் முற்றிலும் சேதமாகின.

இதனால் கோபமடைந்த அமெரிக்கா 1945 ஆம் ஆண்டு ஜப்பானில் உள்ள நகரங்களான ஹிரோசிமா நாகசாகி மீது அணு குண்டு வீசியது. இதில் பல்லாயிரக் கணக்கில் உயிர்ச்சேதமும் பலத்த பொருள்சேதமும் ஏற்பட்டன.

இதேவேளை, அமெரிக்காவால் ஜப்பான் நகரங்களில் வீசப்பட்ட அணு குண்டு வீச்சில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கடந்த மே மாதம் அமெரிக்க அதிபர் ஒபாமா ஜப்பான் சென்றார். அதற்கு நன்றி கூறும் விதமாக ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே அமெரிக்காவின் பியர்ல் துறைமுகத்தில் ஜப்பான் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளார்.



ஜப்பான் பிரதமரும் அமெரிக்க அதிபர் ஒபாமாவும் நேற்று அமெரிக்காவின் ஹோனோலுலுவில் நடந்த மாநாட்டில் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது(ஐ)

## மொஸ்கோ ரயில் நிலையங்களில் குண்டு அச்சுறுத்தலால் பரபரப்பு!

மொஸ்கோ, டிசெ.28

ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் உள்ள ரயில் நிலையங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து அந்த நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மர்மநபரிடமிருந்து வந்த வெடிகுண்டு அச்சுறுத்தலைத் தொடர்ந்து மொஸ்கோவில் உள்ள ரயில் நிலையங்களிலிருந்து 3 ஆயிரம் பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பின்னர், மோப்பநாய்கள் உதவியுடன் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, 92 பேருடன் சிரியாவுக்குப் பயணித்த ரஷ்ய இராணுவ விமானம் கருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதை தொடர்ந்து வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை என ரஷ்யா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## படகு மூலம் 49 நாள்களில் உலகைச் சுற்றிச் சாதனை!

### முன்னைய சாதனையும் முறியடிப்பு

பரிஷ், டிசெ.28

பிரான்ஸை சேர்ந்த தோமஸ் கோவில்லோ என்பவர் 49 நாள்களில் படகு மூலம் உலகைச்சுற்றிவந்து சாதனை படைத்துள்ளார்.

பிரான்ஸைச் சேர்ந்தவர் தோமஸ் கோவில்லோ (வயது- 48). இவர் கடல் பயணம் மேற்கொள்வதில் ஆர்வம் மிகுந்தவர் எனக் கூறப்படுகிறது. இவர் படகு மூலம் உலகைச் சுற்றி வரத் திட்டமிட்டார்.

அதற்காக 31 மீற்றர் நீள படகில் தனி ஆளாகப் பயணம் மேற்கொண்டார்.

தனது பயணத்தை முடித்த அவர் 49 நாள்களில் மேற்கு பிரான்ஸில் உள்ள பிரெஸ்ட் துறைமுகத்துக்கு மீண்டும் திரும்பினார்.

அங்கு திரும்பிய அவர் தன்னுடைய சாதனையை நினைத்து தன்னை அறியாமல் கண்ணீர் விட்ட சம்பவம் அங்கிருந்தவர்கள் அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இவர் 49 நாள்கள், 3 மணி 7 நிமிடம் மற்றும் 38 வினாடிகளில் உலகை சுற்றி முடித்துள்ளார்.

இதற்கு முன்பு கடந்த 2008 ஆம் ஆண்டு பிரான்சிஸ் ஜோயன் என்ற பிரான்ஸ்காரர் 57 நாள்கள் மற்றும் 13 மணி நேரத்தில் படகில் உலகை சுற்றி வந்தார். தற்போது அவரை விட 8 நாள்கள் முன்னதாகவே உலகைச் சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து கோவில்லோ கூறும்போது, இந்தச் சாதனை படைக்க நான் 10 ஆண்டுகள் கடுமையாக உழைத்தேன். பிரான்சிஸ் ஜோயனின் சாதனையை முறியடிக்க 5 முறை முயற்சி செய்து தற்போதுதான் வெற்றி பெற்றுள்ளேன்.-என்றார்.



இங்கிலாந்து சென்றிருந்த பெல்ஜியம் இராணுவ அமைச்சர் ஸ்டீவன் வான்புட், அந்த நாட்டு இராணுவ அமைச்சர் சேர் மிகைல் பாலோனை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். (ஐ)

## உகண்டாவின் ஏரியில் படகு மூழ்கியதில் கால்பந்து வீரர்கள் உட்பட 30 பேர் பலி!



கம்பாலா, டிசெ.28

உகண்டாவிலுள்ள ஏரியில் படகு மூழ்கியதில், கால்பந்து வீரர்கள் உட்பட 30 பேர் ஏரியில் மூழ்கி பலியாகினர்.

உகண்டா நாட்டிலுள்ள புலிசா மாவட்டத்தின் கவெய் பாண்டா கிராமத்தைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு நடந்த கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்காக அல்பெர்ட் ஏரியில் படகில் பயணித்தனர். டிரம்ஸ் உள்ளிட்ட இசைக் கருவிகளுடன் ஆடிப் பாடிப் பயணித்த அவர்கள் சென்ற படகு, திடீரென ஏரியில் மூழ்கியது.

இந்தச் சம்பவத்தில் கால்பந்து வீரர்கள் உட்பட, 30 பேர் பலியாகினர். 15 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அல்பெர்ட் ஏரி, உலகின் 27 ஆவது பெரிய ஏரியாகவும், ஆபிரிக்காவின் 7 ஆவது பெரிய ஏரியாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'பியர்' போத்தல்களில் இந்துக் கடவுளர்கள்

### இந்து இயக்கத் தலைவர் கண்டனம்



பிரேசில், சாவோபாலோவைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அம்பரோ மது தயாரிப்பு நிறுவனம், இந்து கடவுள்களான கணேசர் மற்றும் விஷ்ணு உருவம் பொறித்த 'பியர்' வகைகளை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதற்கு இந்துக்கள் தரப்பில் இருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்கா, நிவேடாவில் உள்ள இந்து இயக்கத் தலைவர் ராஜன் ஜெட், அறிக்கை ஒன்றின் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'பியர்' போத்தல்களில் இந்துக் கடவுள்களின் உருவங்கள் அச்சிடப்பட்டுள்ளமை முறையற்ற செயல். இதனால், இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் மனம் புண்பட்டுள்ளது.

இந்துக் கடவுளர்கள் கோவில்களிலும், இல்லங்களிலும் இந்துக்களால் பூஜிக்கப்படுபவர்கள். இந்த நிலையில், கடவுள்களை இழிவுபடுத்தும் வகையில் 'பியர்' போத்தல்களில் இந்துக் கடவுள்களின் உருவங்களை அச்சிடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

கடவுள்களை மது விற்பனைக்குப் பயன்படுத்தி உள்ளமை மரியாதைக் குறைவான செயல் ஆகும். உலகின் மிகப் பழைமையான மதங்களில் முதன்மையானது இந்து மதம். வழமையான ஆன்மீக, யோக தத்துவங்களை தன்னுள் அடக்கியது. இந்த நிலையில், இந்துக் கடவுளர்களின் உருவங்களையோ, இந்துச் சின்னங்களையோ சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ தவறாகப் பயன்படுத்தக் கூடாது.- என்றுள்ளது. (ஐ)

## ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நிலைக்க வேண்டும்

### இதுவே அங்குள்ள பலரது விருப்பம்

லண்டன், டிசெ.28

பிரித்தானியா தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று அங்குள்ள பலரும் விரும்புகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அங்குள்ள ஊடகங்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. கடந்த 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் தான் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் கடந்த 43 ஆண்டுகளாக இணைந்திருந்து செயற்பட்டு வந்த நிலையில், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதா, வேண்டாமா என்பது குறித்து அண்மையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக 52 சதவீத மக்கள் வாக்களித்தனர்.

இதையடுத்துப் பிரித்தானிய ஐரோப்பிய ஒன்றித்தில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது.

எனினும், வாக்கெடுப்பின் போது வெளியேற வேண்டும் என்று வாக்களித்தவர்களில் 60 சதவீதமானவர்கள் தற்போது பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதையே விரும்புகின்றனர் எனக் கடந்த 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

# ஒட்டுண்ணிகளாக வாழ்வதாலேயே பூமியில் பேரழிவுகளைச் சந்திக்கின்றோம்

## இயற்கைப் பேரிடர் தணிப்பு தின நிகழ்வில் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, டிசெ.28

பூமி எமது தாய். தமிழ் மொழியில் மாத்திரம் அல்ல. உலகில் பேசப்படும் அனைத்து மொழிகளிலுமே பூமியை அன்னை என்றும் பூமாதேவி என்றும் பூமிக்கு உயிர்கொடுத்துத் தான் அழைத்து வருகிறார்கள். ஆனால், பூமியின் குழந்தைகள் போல் நாங்கள் நடந்து கொள்வதில்லை. பூமியில் நாங்கள் ஒட்டுண்ணிகளாகவே வாழ்ந்து வருகிறோம். அதன் விளைவுதான் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படக் காரணம்.

இவ்வாறு வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத் தீவு மாவட்டத்தில், செம்மலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இயற்கைப் பேரிடர்களை முற்றாகத் தவிர்க்க இயலாமல் போனாலும், அவற்றின் பாதிப்புகளைத் தணிக்க இயலும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு அமர்வாக இது இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பூமிக்கு உயிர் உண்டு. பாடங்களை நாங்கள் இரசாயனவியல், பௌதிகவியல், புவியியல், உயிரியல் என்று தனித்தனியாகப் படித்து வருவதாலேயே பூமியின் முழுப் பரிமாணங்களையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். எமது உடலின் வெப்ப நிலையை, குருதியில் உள்ள குளுக்கோஸின் செறிவை உடல் மாறாமற் பேணி வருகிறது.

அதேபோன்று, பூமியும் தன் வெப்ப நிலையை, வளியில் உள்ள வாயுக் கலவையின் வீதாசாரங்களைச் சீராக வைத்திருக்கிறது.








மனிதனின் உடலில் ஒரு சீர்த்திட நிலை காணப்படுவதைப் போன்றே, பூமியிலும் அது பேணப்பட்டு வருகிறது. இது குழப்பப்படுகின்றபோதே அழிவுகள் ஏற்படுகின்றன.

எமது உடலில் கிருமிகளின் தொற்று ஏற்படும் போது உடலின் நோயெதிர்ப்பு ஆற்றல் கிருமிகளுடன் போரிடுகிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் பலமாக இருந்தால் கிருமிகள் அழிக்கப்பட்டுவிடும். கிருமிகளின் தாக்குதல் வீரியமாக இருந்தால் நாங்கள் நோய் வாய்ப்பட்டுக் கடைசியில் இறக்க நேரிடுகிறது. இதே போன்றதொரு யுத்தம்தான் பூமித் தாய்க்கும் மனிதக் கிருமிகளுக்கும் இடையில் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

மனிதர்களின் இப்போதைய சனத்தொகை 740 கோடி. இவ்வளவு பேரும் பூமித்தாயின் வளங்களை அளவுக்கு அதிகமாகச் சூறையாடி ஒட்டுண்ணி வாழ்க்கையையே நடத்தி வருகிறோம். பூமியின் நலனில் நாங்கள் அக்கறை கொள்ளாததால், தன் நலனில்தானே அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் பூமிக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் புயல், மழை, வெள்ளம், கடும் வறட்சி, கடற்கோள் என்று இயற்கைப் பேரிடர்களை ஏற்படுத்திப் பூமி எங்களை அழித்து வருகிறது.

பூமிக்கும் எங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த யுத்தத்தில் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டிய இறுதிக் கட்டத்திலேயே நிற்கிறோம். எங்களது உணவுக் குழாயில் இ-கோலி என்ற பக்றீரியாக்கள் கோடிக் கணக்கில் குடியிருக்கின்றன. நாங்களும் இ-கோலி பக்றீரியாக்களும் ஒன்றுக்கொன்று நன்மை பயக்கும் வகையில் வாழ்வதால் ஒன்றையொன்று அழிப்பதற்கு முற்படுவதில்லை. அதேபோன்று, நாங்களும் பூமித் தாய்க்கு நன்மைகள் செய்து, அவளிடம் இருந்தும் நன்மைகள் பெற்று ஒன்றிய வாழிகளாக வாழ்ந்தால் மட்டுமே இயற்கையின் சீற்றங்களைத் தணிவிக்க இயலும்.

மாறாக, தொடர்ந்தும் ஒட்டுண்ணிகளாகவே வாழ்ந்து பூமியின் வளங்களை உறிஞ்ச முற்படுவோமானால் நாங்களும் அழிந்து பூமியும் அழிவது தவிர்க்க இயலாமற் போய்விடும்.- என்றார். (ஐ-10)

---

## 7 எம்.பிகள் சொத்து விவரம் தரவில்லை!

### மஹிந்த தேசப்பிரிய தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிவிப்புக்களை வழங்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிவிப்புக்களை கையளிக்காத அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டில் 64 அரசியல் கட்சிகள் உள்ளன. இவற்றில் 50 அரசியல் கட்சிகள் கடந்த வருடத்துக்கான தமது சொத்து மதிப்புக்களை சமர்ப்பிக்கவில்லை.

தேர்தல்கள் ஆணைக்குழு சகல அரசியல் கட்சிகளின் நிர்வாகிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிவிப்புக்களை பெற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

அரசியல் கட்சிகள் சார்பில் இன்னமும் இந்தத் தகவல்களை வழங்காதுள்ளவர்கள் யார் என்பதை குறிப்பிட்டுக் கூறமுடியாது. பெரும்பாலான அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்களை சமர்ப்பித்துள்ளனர். எஞ்சியவர்கள் தமது விவரங்களை வழங்கவில்லை.-என்றார். (ஐ)

---

## பட்டப்பகலில் 11 பவுண் நகை திருட்டு

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பட்டப்பகலில் உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகை, பணம் என்பனவற்றைத் திருடிச்சென்றுள்ளனர். நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 11 பவுண் நகை, மற்றும்7 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டில் உள்ளோர் ஆலயத்துக்குச் சென்ற சமயம் அதனைப் பயன்படுத்தி ஜன்னல் கம்பிகளை வளைத்து உள் நுழைந்த திருடர்கள் இந்தத் திருட்டை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-40)

---

## வெளியுலகு வந்த புலிக்குட்டி...



மன்னார் அடம்பன் பிரதேசத்தில் அநாதரவான நிலையில் காணப்பட்ட சிறுத்தைக் குட்டி ஒன்றை மன்னார் பொலிஸ் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

சிறுத்தைக் குட்டியைப் பொலிஸார் அநுராதபுரம் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சிறுத்தைக் குட்டி நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்கிறது என்று அநுராதபுரம் மற்றும் வடமேல் பிராந்தியத்துக்குப் பொறுப்பான கால்நடை மருத்துவர் சந்தன ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

---

## சட்டவிரோத மணல் ஏற்றிய ஹன்ரர் வாகனம் அகப்பட்டது



பருத்தித்துறை, டிசெ.28

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த ஹன்டர் வாகனம் ஒன்றைத் தாம் கைப்பற்றியுள்ளனர் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை மழை பெய்ததைச் சாதகமாகப் பயன்படுத்தியும், பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு நடைபெறுவதால் அவர்கள் வரமாட்டார்கள் என்று எண்ணியும் சட்டவிரோத மணல் ஏற்றப்பட்டுள்ளது என பொலிஸார் கூறினர்.

இருந்தும் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரால் அனுப்பப்பட்ட பொலிஸ் அணி மண் ஏற்றிய ஹன்டரைக் கைப்பற்றியது என்று அவர்கள் கூறினர்.

# தென்னாபிரிக்கா - இலங்கை டெஸ்ட்: நேற்று இலங்கை 181 ஓட்டங்கள்

இலங்கை – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத் மைதானத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது டெஸ்டின் முதல்நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கஅணி6விக்கெட்டுக்கள் இழப்புக்கு 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல்நாள் ஆட்ட நேரமுடிவில் ஹொக்25ஓட்டங்களுடனும்பிலேண்டர் 6ஓட்டங்களுடனும்களத்தில்இருந்தனர்.

முதல் டெஸ்டின் இரண்டாம் நாள் போட்டி ஆரம்பமாகிய போது தென்னாபிரிக்க அணி தனது மிகுதி ஆட்டத்தைத் தொடங்கியது. ஹொக் 37 ஓட்டங்களையும், பிலேண்டர் 13 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க அடுத்து வந்த மகாராஜ்மற்றும்அபொட் ஆகியோர் ஓட்டங்கள் எவையும் பெறாமல் வெளியேறினர். இதனால் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று இலங்கை அணியில் லக்மால் 1விக்கெட்டையும் பிரதீப் 2 விக்கெட்டுக்களையும் பறித்தனர்.

தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்குவதற்கு இலங்கை அணியில் கருணாரட்ணமற்றும்சில்வாஆகியோர் களமிறங்கினர்.

கருணாரட்ண 10 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்று அபொட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பெரேரா 13 பந்துகளை எதிர்கொண்டு 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிலேண்டரின்பந்துவீச்சில்ஹொக்கிடம் பிடிகொடுத்தார். அவரது இடத்தை நிரப்ப வந்த மெண்டிஸை அபொட் ஓட்டங்கள் எவையும்பெறவிடாமல்வெளியேற்றினார்.

ஆரம்பம் முதல் நிதானமாக ஆடி வந்த சில்வா 59 பந்துகளுக்கு முகம் கொடுத்து 16 ஓட்டங்களைப்பெற்றிருந்த வேளை பிலேண்டரின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார். தொடர்ந்துவிளையாடிய மெத்யூஸ் 39 ஓட்டங்களையும், சந்திமால் 28 ஓட்டங்களையும், ஹேரத் 24 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பிலேண்டர் 3 விக்கெட்டுக்களையும், அபொட் 2 விக்கெட்டுக்களையும், நபாடா, மகாராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இருள் காரணமாக 57 ஓவர்களில் நேற்றைய நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்ட நேர முடிவில் டி.சில்வா 43 ஓட்டங்களுடனும் சமீர 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றைய நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்

# கனே வில்லியம்சன்

கிறிஸ்ட்சர்ச், டிசெ.28

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது நியூசிலாந்து அணி யின் தலைவர் கனே வில்லியம்சன் (வயது 26) சர்வதேச ஒரு நாள் கிரிக் கெட் அரங்கில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் டாம் லாதமின் சதத்தின் உதவியுடன் நியூசிலாந்து அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணியின் தலைவர் கனே வில்லியம்சன் இந்த ஆட்டத்தில் 31 ஓட்டங்களை (36 பந்து, 5 பவுண்டரி), வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமதுவின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹிமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். முன்னதாக வில்லியம்சன் பவுண்டரி அடித்து 23 ஓட்டங்களை தொட்ட போது, சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.




இதுவரை 102 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள வில்லியம்சன் அதில் 96 இன்னிங்ஸில் களம் இறங்கி 4,011 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதன் மூலம் 4 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை அதிவேகமாக எட்டிய நியூசிலாந்து வீரர் என்ற சாதனையை படைத்தார்.

இதற்கு முன்பு மார்ட்டின் கப்தில் 112 இன்னிங்ஸில் இந்த இலக்கை தொட்டதே நியூசிலாந்து வீரரின் சாதனையாக இருந்தது.

உலக அளவில் அதிவேகமாக 4 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டியவர்களின் வரிசையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கார்டன் கிரீனிட்ஜூடன் வில்லியம்சன் 4 ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். இந்த இந்தச் சாதனை பட்டியலில் முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்காவின் அம்லா (81 இன்னிங்ஸ்), மேற்கிந்தியத்தீவுகள் விவியன் ரிச்சர்ட்ஸ் (88), இந்தியாவின் விராட் கோஹ்லி (93) ஆகியோர் உள்ளனர்.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்: பாகிஸ்தான் வீரர் அசார்அலி சதம்



மெல்போர்ன், டிசெ.28

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அசார்அலி அபாரமாக விளையாடி சதம் அடித்துள்ளார். ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்போர்ன் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

முதலில் விளையாடிய பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 142 ஓட்டங்களை எடுத்து இருந்தது. தொடக்க வீரர் அசார்அலி 66 ஓட்டங்களுடனும், ஆசாத் சபீக் 4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். மழையால் 40 ஆவது ஓவரில் ஆட்டம் தடைப்பட்டது.


நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. பாகிஸ்தான் அணி தொடர்ந்து விளையாடியது.

அசார் அலி மிகவும் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். 218 பந்துகளை சந்தித்து 7 பவுண்டரியுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார்.

56 ஆவது டெஸ்டில் விளையாடும் அசார் அலிக்கு இது 12 ஆவது சதமாகும். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 3 ஆவது சதத்தை பதிவு செய்துள்ளார். மதிய உணவு இடைவேளைக்கு பின்னர் 2 ஆவது முறையாக மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. தேநீர் இடைவேளை வரை மழை பாதிப்பு இருந்தது.

அப்போது பாகிஸ்தான் அணி 4 விக்கெட் இழப்புக்கு 232 ஓட்டங்களை எடுத்து இருந்தது. அசார்அலி 112 ஓட்டங்களுடனும், ஆசாத்சபீக் 48 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். 101 ஆவது ஓவரில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளை இழந்து310 ஓட்டங்களை எடுத்தது.

## ஸிம்பாப்வே வீரருக்கு ஓராண்டுத் தடை!



டுபாய், டிசெ.28

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரையன் விடோரி பந்து வீசிய பிரச்சினையில் சிக்கியிருப்பதால் அவருக்கு பந்து வீச ஐ.சி.சி. ஓராண்டு தடை விதித்துள்ளது.

## தீவிர சிகிச்சைப்பிரிவில் சுசந்திகா ஜெயசிங்க

கொழும்பு, டிசெ.28

இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தியத்தலாவ வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுசந்திகா ஜெயசிங்க ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் பெற்றுக்கொடுத்து நாட்டுக்கு பெருமை சேர்த்த வீராங்கனை என்பதுடன், இவர் சர்வதேச போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகளை தேர்ந்தெடுக்கும் ஆலோசகர் மற்றும் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## அஸ்வின் மீண்டும் அப்பாவானார்



சென்னை, டிசெ.28

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின்-பிரீத்தி தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்தத் தம்பதிக்கு ஏற்கனவே ஒன்றரை வயதில் பெண் குழந்தை உள்ளார். இந்த நிலையில் கடந்த 21 ஆம் திகதி இவர்களுக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்துள்ளது.

# திறமையை நிரூபித்தார் சுரங்க லக்மல்



போர்ட் எலிசபெத், டிசெ.28

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்போட்டியில் இலங்கை அணியின் பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் தனது திறமையை நிரூபிக்கும் வகையில் விளையாடியிருந்தார்.

இலங்கை அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது. இதில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

முதலில் நன்றாக விளையாடிக் கொண்டிருந்த தென்னாபிரிக்க அணிக்கு பெரிதும் தலைவலி கொடுத்தவர் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மல்.

இலங்கை அணியின் துவக்க பந்து வீச்சாளரான சுரங்க லக்மல், இதுவரை 31 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார். இவரின் சராசரி 47 வரை இருக்கும் என்று கூறப்படுகிறது.

இவருடைய சராசரி மற்றும் செயல்திறன் அண்மை காலமாக சிறப்பாக இல்லை என்று கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தென்னா பிரிக்க அணியின் நட்சத்திர ஆட்டக்காரர்களான எல்கார், ஸ்டீபன்குக், ஆம்லா மற்றும் டூபிலசிஸ் ஆகியோரை தன்னுடைய நேர்த்தியான பந்துவீச்சின் மூலம் வீழ்த்தி லக்மல். தன்னுடையே திறமையை நிரூபித்துள்ளார்.

இதுவே அவருடையே டெஸ்ட் போட்டியில் சிறந்த ஒரு இன்னிங்சாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

# ரஷ்ய ஓட்ட வீராங்கனை யூலியா ஸ்டெபனோவாவின் பயிற்றுநருக்கு தடை




நியூயோர்க், டிசெ.28

ரஷ்ய ஓட்ட வீராங்கனை யூலியா ஸ்டெபனோவாவின் முன்னாள் பயிற்றுநருக்கு 10 வருடகால தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனை தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் பயிற்றுநர் விளாடிமிர் மொக்னே வுக்கு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறை பிணக்குகளுக்கான சர்வதேச தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் அரச ஆதரவுடன் இடம்பெறும், ஊக்கமருந்து பாவனை விவகாரங்களை, அம்பலப்படுத்துவதில், யூலியா ஸ்டெபனோவாவும் அவரின் கணவர் விட்டாலி ஸ்டெபனோவும் முன்னின்றமை குறிப்பிடத்தக்கது.


30 வயதான யூலியா, 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பிரபலமானவர். முன்னர் யூலியா ரஸனோவா எனும் பெயரில் அறியப்பட்ட இவர், 2009 ஆம் ஆண்டு விதாலி ஸ்டெபனோவை திருமணம் செய்தார்.

ரஷ்ய விளையாட்டுத்துறையில் அரச ஆதரவுடன் இடம்பெற்றதாக கூறப்படும் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பாவனை தொடர்பான விடயங்களை அம்பலப்படுத்திய பின்னர் யூலியா தலை மறைவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில், அவரின் முன்னாள் பயிற்றுர் விளாடிமிர் மொக்னேவ்வுக்கு 10 வருடகால தடை விதிக்கப் பட்டுள்ளது.

# பறவையின் இறகை பிய்த்து எடுப்பது போல் இந்திய அணியை துடிக்கவைப்போம்!

## ஆஸ்திரேலியா அணித் தலைவர் ஸ்மித்



மெல்போர்ன், டிசெ.28

பறவையின் இறகை பிய்த்து எடுப்பது போல இந்திய அணியை துடிக்க வைப்போம் என்று ஆஸ்தி ரேலியா அணியின் தலைவர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இவ்விரு அணிகளுக் கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி புனேயில் உள்ள மகாராஷ்ட்டிரா மைதானத் தில் நடைபெற உள்ளது.

இந்நிலையில் இத்தொடர் குறித்து ஆஸ்திரேலியா அணியின் தலைவர் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அணியை சிறப்பாக வழிநடத்திச் செல்லும் கோஹ்லியை சீண்டிப் பார்க்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் கோஹ்லி, உலகத்தரமான வீரர் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

கடந்த 18 மாதங்களாக அவர் இந்திய அணியை சிறப்பாக வழிநடத்தி செல்கிறார். இந்த குறிப்பிட்ட காலங்களில் இந்திய அணி பல வெற்றிகளை குவித் துள்ளது.

அதற்கு காரணம் அவர்கள் சொந்த மண்ணில் அதிக போட்டிகள் விளை யாடுவது தான். கோஹ்லி யின் நடைமுறைகளில் நிறைய வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பு இருந்த கோஹ்லி களத்தில் சற்று ஆக்ரோஷப்படுவார், ஆனால், அவர் தற்போது களத்தில் ஆக்ரோஷத்தை குறைத்துள்ளது போல் தோன்றுகிறது.

ஓர் அணியாக இந்திய தொடரின் போது அவரை கோபத்தின் உச்சத்துக்கு கொண்டு செல்ல தாங்கள் ரெடியாக உள்ளோம். பறவையின் இறகை பிய்த்து எடுப்பது போல உணரவைத்தால், இந்திய அணி சற்று ஆட்டம் காணும். இதை நிச்சயம் செய்வோம் என்றும் கூறியுள்ளார்.

# இந்திய ஹொக்கி வீரர்கள் உட்பட 9 வீரர்களுக்கு டி.எஸ்.பி. பதவி



சண்டிகார், டிசெ.28

6 இந்திய ஹொக்கி வீரர்கள் உள்பட 9 விளை யாட்டு வீரர்களுக்கு டி.எஸ்.பி. பதவி நியமனம் செய்து பஞ்சாப் அரசு கௌரப்படுத்தியுள்ளது.

இந்தியாவில், தாய் நாட்டுக்காக விளையாட் டில் சாதிக்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு அரசு பதவி கொடுத்து கௌரவிப்பது வழக்கம்.

அந்த வகையில் பஞ்சாப் அரசு விளையாட்டிற்கான ஒதுக்கீட்டில் 9 வீரர்களுக்கு டி.எஸ்.பி. பதவி வழங்கி கௌரவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு இந்திய ஆண்கள் ஹொக்கி அணி ஆசிய போட்டியில் தங்கம் வென்றது. இதனால் மான்ப்ரீத் சிங், ஆகாஷ்தீப் சிங், சர்வான்ஜித் சிங், ராமன்தீப் சிங், புர்விந்தர் சிங் சண்டி மற்றும் தரம்வீர் சிங் ஆகியோருக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளது.

சண்டிகாரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பஞ்சாப் மாநில துணை முதல்வர் சுக்பிர் சிங் பாதல் இந்தப் பதவிகளுக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# காந்தி சிலைக்கு எதிராகக் கருத்து பகிர்வு: 3 இளைஞர்கள் பொலிஸாரால் விசாரணை

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கண்டனம்

முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ள காந்தி சிலைக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவேற்றிய மூன்றுஇளைஞர்கள்முல்லைத் தீவுப் பொலிஸாரால் நேற்று முன்தினம்நள்ளிரவுவரைவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

முல்லை. நகரில் அமைக்கப்பட்ட காந்தி சிலை தற்போது சாய்த்து வீழ்த்தப்பட்ட நிலையில், அது வீழ்த்தப்பட்டமைக்கும் இந்த இளைஞர்களுக்கும் தொடர்புள்ளதா என்றசந்தேகத்தின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் முல்லை.மாவட்ட இணைப்பாளர் என்று கூறப்படும் ஒருவரின் முறைப்பாட்டின் அடிப்படையிலேயேஇந்தவிசாரணைநடத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

ஆதாரமற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் இந்தவிசாரணைநடத்தப்பட்டது என்று கூறிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அதற்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

பொலிஸாரின் விசாரணைக்குச்சென்ற இளைஞன் ஒருவன் அன்றிரவு 8.10 மணியளவில் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி பொலிஸார் தன்னை விசாரணைக்கு அழைப்பதாக கூறினார். இரவுநேரம் அங்குசெல்ல வேண்டாம், வேண்டுமாயின் அவர்களை எனது இல்லத்திற்கு வருமாறு கூறிவிட்டு நீங்களும் வாருங்கள்என்றுஅழைத்தேன்.

பொலிஸார் வந்து, அந்த இளைஞனை விசாரணைக்காக கட்டாயம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறினர். அவரோடு நானும் பொலிஸ் நிலையம் சென்றேன். அங்கு எல்லாமாக மூன்று இளைஞர்களை நள்ளிரவு வரை விசாரணைக்கு உட்படுத்தினர். விசாரணை முடியும் வரை நானும் பொலிஸ் நிலையத்தில் இருந்தேன்.

நாடாளும்ன்ற உறுப்பினர் சிவமோகனின் இணைப்பாளரது ஆதாரமற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை இடம்பெற்றது. எனவே, இந்த முறைப்பாடு தனது அனுமதியுடன்தான் வழங்கப்பட்டதா என்பதை சிவமோகன் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் தமிழ் இளையோரை நள்ளிரவு வரை விசாரிக்கும் முனைப்புக்கு அவரும் துணை போயுள்ளார் என மக்கள் சந்தேகிக்கும் நிலை ஏற்படும்.

தமது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவிக்க முனையும் இளைஞர்களைச் சந்தேகத்தின் அடிப்படையில் இரவில் விசாரணைக்கு அழைப்பதையும் நள்ளிரவு வரை காவல் நிலையத்தில் வைத்திருப்பதையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். – என்று அவர் தெரிவித்தார். (ம–81)

### எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைகள், அவற்றின் கீழான வட்டாரப் பிரிப்புகள் எல்லாம் இந்தஎல்லைநிர்ணயஆணைக் குழுவினால் வகுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில்உள்ளூராட்சித் தேர்தல்கள் இந்த எல்லை நிர்ணயத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சர்பைஸர் முஸ்தபாவெளிநாடுசென்றுள்ள நிலையில் எல்லை நிர்ணய அறிக்கை இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்னவிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஐந்து மாவட்டங்களில் தமிழ் மொழி பெயர்ப்புநடவடிக்கைகள்நிறைவடையாத காரணத்தால் அறிக்கைநேற்றுச்சமர்ப்பிக்கப்படவில்லை என்று அசோகா பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எல்லைநிர்ணயம், வரைபடம் மற்றும் மொழிபெயர்ப்பு ஆகிய மூன்று விடயங்களைக் கொண்டனவாகஎல்லைநிர்ணயப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் எல்லை நிர்ணயம், வரைபடம் ஆகியன முற்று முழுதாக நிறைவு பெற்றுள்ளன எனவும் மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இந்தச் சிக்கல் ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தஅறிக்கைகடந்த15ஆம் திகதி வெளியிடப்படும் என முன்னர்அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும்தமிழ்மற்றும்ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகள் நிறைவடையாத காரணத்தால் அந்த அறிக்கை நேற்று வெளியிடப்படும் எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது. (உ)

### சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலவருடங்களுக்குமுன்னர் புதுடில்லி ஆஸ்பத்திரி ஒன்றிலேயே அவர் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அதே மருத்துவரின் மருத்துவ சோதனைக்காகவே இப் போது அவர் புதுடில்லி சென்றிருந்தார்.

தமது உடல்நிலை குறித்து மருத்துவர் முழு திருப்தி தெரிவித்தார் என்றார் சம்பந்தன்.

"புதுடில்லியில் அரசியல் தலைவர்களையோ பிற முக்கிய பிரமுகர்களையோ சந்தித்து உரையாடினீர்களா"? – என்று கேட்டபோது. –

"அரசியல் தலைவர்களைச் சந்திக்கவில்லை. ஆனால் முக்கியமான சில சந்திப்புக்களில் ஈடுபட்டேன். ஆனால் அவற்றின் விவரங்களை இப்போது வெளியிட நான் விரும்பவில்லை". – என்றார் சம்பந்தன். (உ)

### கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மான சிவசக்தி ஆனந்தன் ஓர் அவசர கடிதத்தை கூட்டமைப்பின்தலைவரானசம்பந்தனுக்கு அனுப்பியுள்ளார் என நேற்று ஊடகங்களில்செய்திகள்வெளியாகியிருந்தன.

அது குறித்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தொடர்புகொண்டுகேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எனக்குக் கடிதம் கிடைக்கவில்லை. அப்படிஒருகோரிக்கை கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிடமிருந்துவருமானால் நாம் அந்தக் கூட்டத்தைக் கூட்டலாம். அதில் சிக்கல் ஒன்றும் இல்லை.

"நாடாளுமன்றம் எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதியில் அரசமைப்பு சபையாக மீண்டும் கூடி விவாதிக்கவுள்ளது. அப்போது கைக்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்துப்பேசுவதற்காகவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை 8ஆம் திகதியன்று கூட்டவுள்ளோம்.

9ஆம்திகதிநாடாளுமன்றின் அந்தக் கூட்டத்துக்கு முன்னர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற கோரிக்கை அங்கத்துவக்கட்சிகளிடமிருந்து வருமானால் கூட்டத்தைக் கூட்டலாம். அதில் இடைஞ்சல் ஏதும் இல்லை. அங்கத்துவக் கட்சிகளின் வசதிக்கேற்ப ஒரு திகதியை நிர்ணயித்து அந்தக் கூட்டத்தைக் கூட்ட முடியும். உரிய விடயங்களை நாம் அதில் பேசலாம்."–என்றார்சம்பந்தன். (உ)

### சமஷ்டியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை காணப்படுவதாலேயே 13ஆவது திருத்தத்தை அரசமைப்பில் உள்ளடக்க உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நாடு பிளவடைவதையும், இரண்டுமாகாண சபைகள் ஒன்றிணைந்து தனி இராச்சியம் ஒன்றை உருவாக்குவதையும் தடுப்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். ஐக்கிய இலங்கைக்குள் சுயாதீனம் மற்றும் இறையாண்மையைப் பாதிக்கும் சமஷ்டித் தீர்வுக்குச் செல்வதற்கு, நாட்டில் இன்னுமொரு நாடு உருவாகுவதற்கு, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

இதேவேளைநடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் புதிய தேர்தல் முறைமையிலேயே நடைபெறும். அதற்குத் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

தொகுதிவாரியான தேர்தல் முறைமையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். அதில் சிறிதளவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தைச் சேர்த்துக் கொள்வது தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதில் எவ்வித மாற்றமும் இல்லை. இரண்டு பிரதான கட்சிகளும் இதற்கு இணங்கியுள்ளன. உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களைப் புதிய முறையிலேயே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முழுமையான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மையானவர்கள் தொகுதிவாரி முறையிலும் சிறு பகுதியினர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவாகும் வகையிலானபுதியதேர்தல்முறையை அறிமுகப்படுத்தும் அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.– என்றார்.

## அதிபர் நியமனம் இழுபறி:

# வடக்கு மாகாண கல்வி அமைச்சரை சாடுகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.28

பரீட்சையில் சித்தியடையாத கடமை நிறைவேற்று அதிபர்களைப் பாதுகாப்பதற்காக வடக்கு மாகாண சபையில் ஆர்ப்பாட்டத்தைச்செய்யுமாறு தூண்டியவரேவடக்குமாகாண கல்வி அமைச்சர்தான் என்று கடுமையாகச் சாடுகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இது தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வழிகாட்டலில் தரம்பெற்ற புதிய அதிபர்களின் பலபோராட்டங்களுக்குப் பின்னர் – மத்திய கல்வியமைச்சின் அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய – நேர்மையாகநடைபெறவிருந்த வடமாகாண புதிய தரம் பெற்ற அதிபர் நியமனத்தை, தனது வரட்டுச் செயற்பாடுகளால் – தகுதியற்றகடமைநிறைவேற்று அதிபர்களைத் தொடர்ந்தும் பாதுகாக்கமேற்கொண்டுவரும் வடமாகாணகல்வியமைச்சரின் குள்ளத்தனமான செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் – கடந்த (22.12.2016) வியாழக்கிழமை – கடமை நிறைவேற்று அதிபர்களை – வடமாகாண சபை அமர்வில்கல்விவிவாதம்நடைபெற முன்பு ஆர்ப்பாட்டம் செய்யுமாறு தூண்டி – அவர்கள் போராட்டம் செய்வது போன்ற தோற்றத்தை உருவாக்கி அவர்களைத்தொடர்ந்தும்பாதுகாக்க முனைந்தமை–தனதுஅரசியல் சுயநலத்துக்காக வடமாகாணக் கல்வியை தரம் தாழ்த்தச் செய்யும்மோசமானசெயற்பாடாகும்.

கடமை நிறைவேற்று அதிபர்கள் – முறையாக அதிபரொருவர் குறித்த பாடசாலைக்கு நியமிக்கப்படும் வரை செயற்படுத்தப்படும் தற்காலிக ஏற்பாடாகும். இது தொடர்பான மத்திய கல்வியமைச்சின் சுற்று நிருபங்களும் உள்ளன. பரீட்சையில்தோற்றியகடமைநிறைவேற்றுஅதிபர்கள்போட்டிப்பரீட்சையில் சித்தியடையாமல் – மீண்டும்தமதுதகுதியற்றநிலையில் அதிபர்களாக செயற்பட முனைவதை வடமாகாணக் கல்வியமைச்சர்ஊக்குவிக்கின்றமை மிக மோசமான செயற்பாடாகும். அதேவேளை–முறையாகத் தெரிவு செய்யப்படாமல் அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் செல்வாக்கால் முறையற்ற விதமாக தெரிவு செய்யப்பட்ட கடமை நிறைவேற்று அதிபர்கள்ளக் காப்பாற்றுவதற்காக முனையும் – வடமாகாண கல்வியமைச்சின் செயற்பாட்டை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தரம்பெற்ற அதிபர்களுக்கு அவர்களுக்குரிய தகுதியான பாடசாலைகள்வழங்கப்படவேண்டும். வடமாகாண முதலமைச்சர் தரம்பெற்ற அதிபர்களின் நியமனங்கள் தொடர்பாக வழங்கிய உறுதிமொழிக்கிணங்கவும் – உத்தரவுக்கமையவும் புதிய அதிபர் நியமனங்கள் நடைபெறவேண்டும். இதனைவடமாகாண முதலமைச்சர் உறுதிப்படுத்தவேண்டும். இல்லையேல் இலங்கைஆசிரியர்சங்கத்தின் தலைமையில் தரம்பெற்ற அதிபர்களை ஒன்றிணைத்து பாரிய செயற்பாட்டை மேற்கொள்வோம். – என்று உள்ளது. (உ)

### முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆனந்தா கல்லூரி போன்றபிரபலபாடசாலைகளில் கல்வி கற்றார்.

சட்டத்துறையில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் அரசியலில் ஏற்பட்ட ஈர்ப்பு காரணமாக 1960 ஆம் ஆண்டு மக்கள் ஐக்கியமுன்னணிசார்பில்தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். பின்னர் 1962 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட இவர் 1965,1970ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

களுத்துறை மாவட்டத்தில் மீண்டும் போட்டியிட்டு கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையும், 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையுமாக இரு தடவைகள் பிரதமராகப் பதவி வகித்திருந்தார்.

தற்போதைய அரசில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிரேஷ்ட ஆலோசகராக இவர் பணியாற்றினார்.

இவரது இறுதி நிகழ்வுகளை அரச அனுசரணையில் நடத் துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ரட்னசிறி விக்ரமநாயக்கவின் உடல் இன்று காலை 10.30 முதல் 11.30 வரை நாடாளுமன்றில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் 31 ஆம் திகதி ஹொரணையில் இடம்பெறும். (ஐ)

## சாவகச்சேரியில் முதியவரின் சடலம் மீட்பு!

சாவகச்சேரி ரயில் நிலையத்திற்கு அருகே நேற்று முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. இளையதம்பி தர்மகுலசிங்கம் (வயது 65) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் நிலையத்திற்கு அருகே அந்தச் சடலம் காணப்பட்டமை தொடர்பாகமக்கள்சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக அறிவித்தனர். சம்பவ இடத்திற்குச்சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம–09)

### பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் நேற்று அதிகாலை 5 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் பிக்கப் வாகனத்தில் பயணித்த,புத்தளத்தைச்சேர்ந்த சிங்களப் பெண் வைத்தியரான ரி.எம்.ஏ. சுதேசிகா, அவரது கணவரின் தந்தையான – வவுனியாவில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும்சப்ரின், அவரதுமனைவி மலீனா ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

வைத்தியரின் கணவரான முகம்மது சபுர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக மதவாச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம–100)

காலைக்கதிர்
Kalaikkathir

# இணைப்புக்கு முஸ்லிம் மக்களின் இணக்கத்தைக் கோருகிறார் மாவை!

## கல்முனை நிகழ்வில் பகிரங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம் டிசெ.28

வடக்கு–கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்மக்கள்உணர்வோடும் இணக்கத்தோடும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார் தமிழரசுக்கட்சியின்தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சேனாதிராசா இவ்வாறு கோரிக்கை விடுத்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறும்போது–

வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்டு 18 ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது.

முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்த வடக்கு கிழக்கு தாயகத்தில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதுதான் எமது குறிக்கோள்.

தந்தை செல்வா கூறியது போல் வடக்கின் பலம் கிழக்கு மக்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதையே நாங்களும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நாங்கள் அனைவரும் சேர்ந்து பேசுவோம். சென்ற முறை மாகாணசபைத் தேர்த



லில் முஸ்லிம் மக்கள் எங்களுக்குத் தேவை என்பதற்காக முதலமைச்சர் பதவியையும் கொடுக்க முன்வந்தோம்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் எங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பது ஒரு துரதிஷ்டவசமான உண்மை.


நாங்கள் வடக்கு–கிழக்கு இணைப்புப் பற்றி ஜனாதிபதியிடம் கூறினோம். அதற்காக முஸ்லிம்களுடன் பேசுங்கள் என்று கூடக் கூறினோம்.

பொறுத்திருந்துபார்க்கவேண்டிய் சூழலுக்குள் நாங்கள் இருக்கின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நாங்கள் இப்பொழுது கோரவில்லை. மாறாக பூரண அதிகாரத்தைக் கொண்டிருக்கும் சமஷ்டி முறையிலான தீர்வையே கேட்டு நிற்கின்றோம்

சமஷ்டித் தத்துவத்தின் அடிப்படையிலே அதிகாரங்கள் பகிரப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கில் ஆட்சி அதிகாரத்தை நாங்களே பயன்படுத்துகின்ற அளவுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும்.

தந்தை செல்வா கூறியது போல்'நம்பநட. நம்பிநடவாதே' என்பதற்கிணங்க விடுதலைப் புலிகளும் ஜனநாயக ரீதியாகச் செயற்பட்ட தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அனைத்தும் புரிந்துணர்வுடன் ஒன்று சேர்ந்து செயற்பட்டதனால்தான் நாங்கள் சர்வதேசத்தில் மிகப் பலம் வாய்ந்த சக்தியாக இயங்க முடிந்தது. – என்றார்.



மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று வைத்தியசாலைக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் அங்கு சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை: அமைச்சர் மட்டப் பேச்சுக்கள் ஜன.2இல்!

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான கூட்டுச் செயற்பாட்டுக்குழுவின் அமைச்சர் மட்டத்திலான பேச்சுக்கள் ஜனவரி 2 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளன.


இந்த விடயம் தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அமைச்சர்கள் மட்டத்தில் நவம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் தொடராகவே இந்தக் குழுக் கூட்டம் நடைபெற உள்ளது என இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் விசாக் சுவர்ணப் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய அமைச்சர்கள் மட்டத்தில் நவம்பரில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இந்தச் செயற்பாட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்குடன் இந்தக் குழு அமைக்கப்பட்டது. செயற்பாட்டுக் குழுவின் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் 6 மாதங்களுக்கு ஒரு முறையும் நடைபெறும் என்று இங்கு முடிவு செய்யப்பட்டது.

இதற்கமைய செயற்பாட்டுக் குழுவின் கூட்டம் டிசெம்பர் 31 ஆம் திகதி புதுடில்லியிலும் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் ஜனவரி 2ஆம் திகதி கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

## செஞ்சோலையில் நூலகம் திறப்பு





கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் சிறுவர்களின் கற்கும் ஆற்றலை மேம்படுத்தும் முகமாக அமைக்கப்பட்ட நூலகக் கட்டடத்தொகுதி திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி இல்லத்தை தற்போது பராமரித்துவரும் செல்வராசா பத்மநாதன் (கே.பி.) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மயிலிட்டி நாகேந்திரம் – இராசரத்தினம் ஜெயா இந்தக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். (ம–54)

## அமைச்சர் டெனிஸ்வரன் நேற்று மூன்று திட்டங்களுக்கு நிதி உதவி

மன்னார், டிசெ.28

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சின் மன்னாரிலுள்ள உப அலுவலகத்தில் வைத்து சில உதவித் திட்டங்களை வழங்கினார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அந்தோனியார்புரத்தில் உள்ள முன்பள்ளிக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்காக 21 ஆயிரத்து 908 ரூபா காசோலை வழங்கப்பட்டது. அந்த முன்பள்ளியின் பொறுப்பாசிரியையிடம் இந்தக் காசோலை கையளிக்கப்பட்டது.

அந்த கிராமத்திற்கு அண்மையில் நிகழ்வொன்றுக்குச் சென்ற அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த உதவி வழங்கப்பட்டது.

மேலும், மாந்தை மேற்கு ஆண்டான்குளம் பரங்கி சாளம்பன் ஸ்ரீ நாகபூணி அம்மன் ஆலயக் கட்டுமானத்திற்கு 30 சிமெந்துப் பைகளைக் கொள்வனவு செய்வதற்கு 27 ஆயிரத்து 810 ரூபா வழங்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு ஏற்பவே இந்த உதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட பரிகாரிகண்டல் அரசினர்தமிழ்கலவன்பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தும் முகமாக குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் மோட்டர் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபா நிதிக்குரிய காசோலை வழங்கப்பட்டது. பாடசாலை அதிபரிடம் இந்தக் காசோலை வழங்கப்பட்டது. (ம)

## நாய் குறுக்கே ஓடியதால் விபத்து படுகாயமடைந்த நபர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.28

கல்லுண்டாய் வெளியில், நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் நேற்று உயிரிழந்தார்.

மானிப்பாய் நாவலடி வீதியைச் சேர்ந்த செபஸ்ரத்தினம் பிறசிசன் அரியநேசன் (வயது54) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 25ஆம் திகதி நத்தார் தினத்தன்று மாலை 5.30 மணியளவில் மேற்படி குடும்பஸ்தர் காக்கைதீவு கல்லுண்டாய் வெளிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, நாய் ஒன்று குறுக்கே ஓடியதால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியது.

இதில் படுகாயமடைந்த அவரை வீதியால் சென்றவர்கள் மீட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். மூன்றுதினங்களாக சிகிச்சை பெற்ற அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். (ம–09)

### கட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்தால் சிறப்பாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

அதனால், நாடாளுமன்ற வாரத்தில் எல்லை நிர்ணய அறிக்கையை என்னிடம் கையளியுங்கள். அப்போது கட்சித் தலைவர்களிடம் அறிக்கை குறித்து ஆராய முடியும் எனவும் அவர் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அறிக்கையை கையளிப்பதற்கு உரிய நேரம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எல்லை நிர்ணய ஆணைக்குழு கோரியிருந்தது. இதற்குப் பதில் வழங்கும் வகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம)

### வெவ்வேறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

கொழும்பு – பதுளை பிரதான வீதியில் கல்துமுல்ல பகுதியில் பெண் ஒருவர் ஓட்டிச்சென்ற கார் திசைமாறிப் பாறைக்குள் விழுந்ததில் அந்தப் பெண் மரணமடைந்தார்.

பொலனறுவை – ஒன்காமம் வீதியில் 6 எல பகுதியில் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நித்தம்புவ – அளவை வீதியில் பொலிஸார் மறித்தபோது வேகமாகத் தப்பித்துச்சென்ற ஓட்டோ விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

தம்புத்தேகமவில் ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் பலியானார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.